REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஓகஸ்ட் 4 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

1932 - 2022



MOBILE

BOOSTER 505

ஒரே பக்கேஜில் TALK TEXT DATA

Voice 1777 நிமிடங்கள்

Text 1777 sms

Data 2GB anytime data


SLTMOBITEL



வரு. 90 இல. 182 | Thursday 04, August, 2022 | 12 பக்கங்கள் | 40/-


### சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்க மீண்டும் அழைப்பு விடுப்பு:

# சகல அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கி தேசிய சபை ஒன்றை நிறுவ தீர்மானம்



## அனைவரது இணக்கப்பாட்டுடன் கூடிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவும் எதிர்பார்ப்பு

**கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவிப்பு**

- பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசு வழங்கிய உயிர் மூச்சுக்கு இந்திய மக்களுக்கு நன்றி
- தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டியமை அத்தியாவசியம்
- புலம்பெயர் இலங்கை தமிழரின் ஒத்துழைப்புடன் நாட்டை மீளக் கட்டியெழுப்பவும் திட்டம்.
- தோட்டத்துறையில் வாழும் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேலைத் திட்டம்
- போராட்டக்காரர்களை பாதுகாக்க சிறப்பு பணியகம்

*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*

அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய சபை ஒன்றை நிறுவ இருப்பதாகவும் அனைவரது இணக்கப்பாட்டுடன் கூடிய வேலைத்திட்டம் ஒன்றை இதனூடாக தயாரித்து முன்னெடுக்க முடியுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடு எதிர்பார்க்கும் சமூக, அரசியல் மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்தத் தயாராக இருப்பதாக தெரிவித்த அவர், சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கு அனைத்து தரப்பினருக்கும் நேற்று மீண்டும் அழைப்பு விடுத்தார் .

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து ஆற்றிய கொள்கை 04



## ஜனாதிபதிக்கு தமிழ்த் தரப்பு ஆதரவு நல்குவது அவசியம்

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து**

ஜனாதிபதியின் சிம்மாசன உரையை காத்திரமாக முன்னெடுத்துச் சென்று, பொருளாதார சவால்களை தீர்க்கின்ற முயற்சிகளுக்குச் சமாந்தரமாக, தமிழ் மக்களின் எதிர்ப்பார்ப்புக்களுக்கான தீர்வுகளையும் முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்புக்களை தமிழ் தரப்புக்கள் ஜனாதிபதிக்கு வழங்க வேண்டுமென்று 04

## சர்வ கட்சி வேலைத் திட்டம்; TNA ஆதரவு வழங்கும்



**சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு**

ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ள சர்வ கட்சி தேசிய வேலை திட்டத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு பூரண ஆதரவை வழங்கும் என அக்கட்சியின் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் எம்பி தெரிவித்தார்.

அதேவேளை சர்வ கட்சி அரசாங்கத்தில் 04

### சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில்

## ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றுக்கொண்டார் சஜித்

**கலந்துரையாட சம்மதித்து பதில் கடிதம்**



அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் மற்றும் பாராளுமன்ற கண்காணிப்பு குழு முறைமையை மீள அறிமுகப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பை ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 04

## பெண்ணொருவருக்கு நீதி வழங்கிய இளஞ்செழியன்

**குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை**



வவுனியா – நெளுக்குளத்தில் 2011 ஆம் ஆண்டில் பெண் ஒருவர் கூட்டு பாலியல் துஷ்பிரயோகத் திற்கு உட்படுத்தப்பட்ட 04

## வங்கி ஊடாக நாட்டுக்கு பணம் அனுப்புவோருக்கு உச்ச வரிச்சலுகை


### சுங்கத் தீர்வையுடன் மின்சார வாகனம் இறக்குமதி செய்யலாம்



**அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு**

இலங்கையிலுள்ள வங்கிக் கட்டமைப்பினூடாக இலங்கைக்கு வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பும் இலங்கை மக்களுக்கு வழங்கும் வரிச்சலுகையை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி வெளிநாட்டில் பணியாற்றும் காலத்துக்கமைய பொருட்களை வாங்க வழங்கும் வரிச்சலுகையை அதிகரிக்கவும் நாட்டுக்கு நேரடியாக அனுப்பும் பணத்தின் தொகைக்கேற்ப சுங்கத்தீர்வையுடன் மின்சார வாகனமொன்றை கொள்வனவு செய்யவும் அனுமதி வழங்க முடிவு செய்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு 04



## ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு SLMC பூரண ஒத்துழைப்பு

**மு.கா. தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு**

*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி மேற்கொள்ளும் சிறந்த நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சியில் அனைத்துத் தரப்பினரோடும் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் 04

### ஜனாதிபதியின் அழைப்பினை ஏற்று

## 10 அரசியல் கட்சிகளும் பேச்சு நடத்த தீர்மானம்



சர்வகட்சி அரசாங்கம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என பாராளுமன்றில் 04



## ஜோசப் ஸ்டாலின் நேற்று கைது

இலங்கை ஆசிரியர் சேவை தொழிற்சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்று (03) கொழும்பில் கைதுசெய்யப்பட்டார்.

தொழிங்சங்கத்தின் தலைமை காரியாலயத்திற்கு சென்ற கொழும்பு மத்திய குற்றத்தடுப்பு பிரிவினர் அவரை கைது செய்தனர். கடந்த மே மாதம் 04

## A/L பரீட்சை முடிவு எதிர்வரும் வாரத்தில்!

**கல்வியமைச்சர் சுசில் தெரிவிப்பு**



கடந்த ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகள் எதிர்வரும் வாரங்களில் வெளிவரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 04

## கொள்கை பிரகடன உரையில் மலையக மக்கள் குறித்தும் கருத்து



**ஜனாதிபதியின் உரையில் மனோ MP நம்பிக்கை**

*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*

சாதகமான பல அம்சங்களைக் கொண்டதாக ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை அமைந்திருந்தது. எமது வேண்டுகோளை ஏற்று மலையக மக்களின் பிரச்சினைகளையும் ஜனாதிபதி தனது உரையில் 04



## மேல்கொத்மலையின் மேலும் இரு வான்கதவுகள் திறப்பு

**ஆறுகளை பயன்படுத்துவோர் அவதானம்** 03



### பேஸ்புக் பதிவினால் சிக்கிய நபர்:

## ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்த இளைஞன் கைது

**ஜா எல பிரதேசத்தில் CIDயினர் அதிரடி** 03

### கொழும்பு, காலி முகத்திடல் பகுதியில்

## சட்டவிரோதமாக தங்கியிருப்போர் 05 ஆம் திகதிக்கு முன் வெளியேறவும்

**பொலிஸார் அவசர அறிவிப்பு**

காலிமுகத்திடல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருப்பவர்களை நாளை 05ஆம் திகதிக்கு முன்னதாக அங்கிருந்து வெளியேற வேண்டுமென பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. அதற்கமைய, காலி முகத்திடல் மற்றும் அதனை அண்மித்த நகர 04

## சர்வகட்சி செயற்பாடுகளுக்கு அ.இ.ம.கா ஒத்துழைக்க தயார்



**ஜனாதிபதியின் உரைக்கும் ரிஷாத் MP வரவேற்பு**

*லோரன்ஸ் செல்வ நாயகம் ,ஷம்ஸ் பாஹிம்*

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை வரவேற்பதாகவும் சர்வ கட்சி 04



### விமான எரிபொருளும் விரைவில் வந்துசேரும்:

## எரிபொருள் கப்பல்களுக்கு முற்பணம் செலுத்தப்பட்டது

**தரையிறக்கும் பணி ஆரம்பம்** 03

## காத்தான்குடியில் பெருந்தொகை எரிபொருட்கள் கைப்பற்றல்

**பதுக்கி வைத்திருந்த இளம் வர்த்தகர் கைது!**



*மட்டக்களப்பு குறூப் நிருபர்*

காத்தான்குடியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவிலான டீசலை காத்தான்குடி பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் இளம் வர்த்தகர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.


காத்தான்குடி ரெலிகொம் வீதி இரண்டாம் குறுக்கு 04

# ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்



















தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஓகஸ்ட் 4 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN




**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.44
ளுஹர் - 12.18
அஸர் - 03.39
மஃரிப் - 06.31
இஷா - 07.44

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆடி 19

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

இலங்கையின் நெருக்கடியை கருதி:

# 13 மில். குரோன்களை வழங்குகிறது நோர்வே!



இலங்கையில் ஏற்பட்டுள்ள உணவு மற்றும் போஷாக்கு நெருக்கடி குறித்து நோர்வே கவலை கொண்டுள்ளது என தெரிவித்துள்ள நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் என்னிகன் குய்ட்ஃபெல்ட், நோர்வே 13 மில்லியன் குரோன்களை ஐ.நா சபையின் மனிதாபிமான பதில் திட்டத்துக்கு வழங்குவதாக கூறியுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள உணவு மற்றும் ஊட்டச்சத்து நெருக்கடி கடுமையான மனிதாபிமான சூழ்நிலை பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. விரைவான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் வரும் மாதங்களில் நிலைமை இன்னும் மோசமாகிவிடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனை கருத்திற்கொண்டு ஐக்கிய நாடுகள் சபை, மனிதாபிமான பதில் திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இதில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களை இலக்காகக் கொண்ட உலக உணவுத் திட்டத்திற்கு 5 மில்லியன் குரோன்களையும், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்துக்கும் சனத்தொகை அமைப்புக்கும் 8 மில்லியன் குரோன்களையும் நோர்வே வழங்குவதாக வெளிவிவகார அமைச்சர் என்னிகன் குய்ட்ஃபெல்ட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை எதிர்த்துப் போராடுவதற்கும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பை வழங்குவதற்கும் நோர்வே முன்னுரிமை அளிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதியின் உரைக்கு ஹர்ச MP வரவேற்பு

ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தெரிவித்த கருத்துக்களை ஏற்றுக்கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது உரையில், இலங்கையை நவீன ஏற்றுமதியை அடிப்படையாக கொண்ட போட்டித்தன்மை கொண்ட சமூக சந்தை பொருளாதாரமாக மாற்றுவது குறித்து தெரிவித்திருந்தார்.

'நான் இதனை முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன். இதுவே எனது நிலைப்பாடு.இதற்கு பாரிய சீர்திருத்தமும் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளச்செய்வதும் அவசியம். நாங்கள் ஒன்றிணைய வேண்டும், பொதுவான திட்டமொன்றின் அடிப்படையில் புதிய இலங்கையை ஏற்படுத்துவதை நோக்கி குறிப்பிட்ட காலத்திற்கு அனைவரும் அல்லது அனைத்துகட்சி அரசாங்கமாக நாங்கள் ஒன்றிணையவேண்டும்' என ஹர்சா டி சில்வா டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

# மேல்கொத்மலையின் மேலும் இரு வான்கதவுகள் திறப்பு

ஆறுகளை பயன்படுத்துவோர் அவதானம்

*ஹற்றன் விசேட நிருபர்*

மலையகத்தில் பெய்து வரும் தொடர் மழையினால் நேற்று (03)மேல் கொத்மலை நீர்தேக்க பகுதியின் நீர்மட்டம் உயர்வடைந்ததையடுத்து மேலும் 02 வான்கதவுகள் திறக்கப்பட்டன.



கடந்த இரு தினங்களில் 5 கதவுகள் திறந்து விடப்பட்டிருந்த நிலையில், நேற்றைய தினமும் இரண்டு வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

இதனால் அணைக்கட்டிற்கு அண்மித்து நீர்நிலையை பயன்படுத்துபவர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்தோடு மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறந்து விடப்பட்டதன் காரணமாக சென். கிளயார் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

இதேவேளை, டெவோன் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை

# சபை ஒத்திவைப்பு விவாதம் எதிர்வரும் 09, 10, 12ஆம் திகதி

- ★ 2022 வரவுசெலவுத்திட்டத்துக்கான திருத்தச் சட்டமூலம் 09ஆம் திகதி
- ★ 22ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலம் 10ஆம் திகதி





ஜனாதிபதி நேற்று (03) பாராளுமன்றத்தில் முன்வைத்த அரசாங்கத்தின் கொள்கைப் பிரடகனம் தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்தை எதிர்வரும் 09, 10 மற்றும் 12ஆம் திகதிகளில் நடத்துவதற்கு நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மூன்று நாட்கள் விவாதத்துக்கு வழங்குமாறு கட்சித் தலைவர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய பாராளுமன்றம் எதிர்வரும் 09ஆம் திகதி பி.ப 1.00 மணிக்குக் கூடவிருப்பதுடன் பி.ப 4.30 மணி வரை விவாதம் நடைபெறும். அத்துடன், எதிர்வரும் 10 மற்றும்

04

# புதிய ஜனாதிபதி, பிரதமர் நியமனம் உள்ளிட்ட முக்கிய அபிவிருத்திகள்

வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அமைச்சர் அலி சப்ரி விளக்கம்

வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு முக்கிய அபிவிருத்திகள் குறித்து வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி விளக்கமளித்துள்ளார்.

வெளிநாட்டமைச்சில் (01) திங்கட்கிழமை நடைபெற்ற இராஜதந்திரிகளுக்கான முதலாவது மாநாட்டில், புதிய ஜனாதிபதியின் தெரிவு மற்றும் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட முக்கிய அபிவிருத்திகள் குறித்து அமைச்சர் அலி சப்ரி, தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு விளக்கமளித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்வதற்கும் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கும் இட்டுச் சென்ற இலங்கையின் அண்மைக்கால அரசியல் நிகழ்வுகளை அமைச்சர் சுட்டிக் காட்டினார். இது தொடர்பான செயன்முறைகள் ஜனநாயக அரசியலமைப்பு கட்டமைப்புக்குள் இடம்பெற்றன. '

நாடு எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை சர்வதேச சமூகத்திலுள்ள அனைத்து பங்குதாரர்களுடனும் மிக அதிக முன்னுரிமையுடன் கலந்துரையாடி விரைவாகத் தீர்ப்பதற்கான ஜனாதிபதியின் அர்ப்பணிப்பை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார். தற்போதைய சமூகப் பொருளாதார சூழலில் பொருத்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் உதவிகளுக்கு அமைச்சர் சர்வதேச சமூகத்திற்கு தனது ஆழ்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்தார்.



தற்போதைய சவால்களை எதிர்கொள்வதில் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படும் பரந்த அடிப்படையிலான, கலந்தாலோசனை அணுகுமுறையை விரிவாகக் குறிப்பிட்ட அமைச்சர், சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பாக நடைபெற்று வரும் கலந்துரையாடல்கள் குறித்துக் குறிப்பிட்டார்.

மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப முற்போக்கான சட்டச் சீர்திருத்தங்கள் விரைவில் மேற்கொள்ளப்படுவது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் 03 புதன்கிழமையன்று (நேற்று) பாராளுமன்றம் அதன் அடுத்த அமர்வுக்காக மீண்டும் கூடும் போது ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் புதிய அரசாங்கத்தின் கொள்கை முன்னுரிமைகள் தொடர்பாக, அனைவருக்கும் நட்பு என்ற கொள்கையின் அடிப்படையில் இலங்கையின் நடுநிலை மற்றும் அணிசேரா வெளியுறவுக் கொள்கையை அமைச்சர் சப்ரி மீண்டும் வலியுறுத்தினார்.

அமைதியான போராட்டத்துக்கான உரிமை, ஒன்று கூடும் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட இலங்கையின் நீண்டகால ஜனநாயக நற்சான்றிதழ்களை அமைச்சர் எடுத்துரைத்தார்.

இந்த உரிமைகள் அரசியலமைப்பு ரீதியில் அரசாங்கத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அரசாங்கம் திறம்பட செயற்படுவதை உறுதி செய்வதற்காக, சட்டத்தின் கட்டமைப்புக்குள் நாட்டில் இயல்பு நிலையை மீட்டெடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அவர் இராஜதந்திர சமூகத்திற்கு விளக்கினார்.

ஜூலை 2022 இல் இயற்றப்பட்ட அவசரகால நிலை வழக்கமான மற்றும் அவ்வப்போது மீளாய்வுக்கு உட்பட்டவை என்பதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சரின் புதிய பொறுப்பை ஏற்றுக்கொண்டமைக்காக இராஜதந்திர சமூகத்தின் உறுப்பினர்கள் அன்புடன் வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், பயனுள்ள புதுப்பித்தலுக்கு நன்றிகளைத் தெரிவித்தனர்.

அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

# சர்வகட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்க மாட்டோம்

JVP தலைவர் அனுரகுமார தெரிவிப்பு



சர்வகட்சி அரசாங்கத்தில் தேசிய மக்கள் சக்தி அங்கம்வகிக்காது என அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உத்தேச சர்வகட்சி அரசாங்கத்திற்கு குறிப்பிட்ட காலவரையறை இல்லாத காரணத்தால் தாம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் புதிய விடயங்கள் எதுவும் கிடையாதென ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநயக்க தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி மேற்கொண்ட கொள்கை விளக்க உரை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அனுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

04






பேஸ்புக் பதிவினால் சிக்கிய நபர்:

# ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்த இளைஞன் கைது

ஜா எல பிரதேசத்தில் CIDயினர் அதிரடி



அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையில் அத்துமீறி நுழைந்தமை தொடர்பில் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். சந்தேக நபர்கள் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்து ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்து புகைப்படம் எடுத்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் தரணியகல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் 28 வயதுடைய சமன்புரகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

04

விமான எரிபொருளும் விரைவில் வந்துசேரும்:

# எரிபொருள் கப்பல்களுக்கு முற்பணம் செலுத்தப்பட்டது

தரையிறக்கும் பணி ஆரம்பம்



நாட்டை வந்தடைந்துள்ள டீசல் கப்பலொன்றுக்கான கொடுப்பனவும் , அது தவிர மேலும் இரு பெற்றோல் மற்றும் டீசல் கப்பல்களுக்கான முற்கொடுப்பனவும்செலுத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் பதிவிட்டுள்ள டுவிட்டர் பதிவில் ,

'நாட்டை வந்தடைந்துள்ள டீசல் கப்பலொன்றுக்கான கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. அந்த கப்பலிலுள்ள டீசல் தொகையை தரையிறக்கும் நடவடிக்கைகள் நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டன. அத்தோடு மேலும் இரு பெற்றோல் மற்றும் டீசல் கப்பல்களுக்கான முற்பணமும் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் விமானங்களுக்கான எரிபொருள் இறக்குமதிக்காக ஓராண்டு ஒப்பந்தமொன்றில்

04

## எரிபொருள் கப்பல்களுக்கு... 
(03ஆம் பக்கத் தொடர்)

கையெழுத்திட்டுள்ளது. அதற்கமைய அந்த ஒப்பந்தத்தின் கீழான முதற்கட்ட விமான எரிபொருள் எதிர்வரும் 12, 14 ஆம் திகதிக்கு இடையில் நாட்டை வந்தடையும்' என்றும் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை கியூ.ஆர். முறைமை தொடர்பில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

'தேசிய எரிபொருள் அனுமதி அட்டை கியு.ஆர். முறைமையுடன் அரசாங்க வாகனங்களை பதிவு செய்வதற்காக , பொதுவான பதிவு முறைமையைப் பயன்படுத்தி அவ் வாகன சாரதியின் அல்லது வாகனத்தைப் பயன்படுத்தும் நபரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் , கடவுச்சீட்டு இலக்கம் அல்லது வியாபார பதிவிலக்கத்துடன் ஒரு வாகனத்திற்கு ஒரு கையடக்க தொலைபேசி இலக்கத்தை பதிவு செய்ய வேண்டும்.

எதிர்வரும் 12 ஆம் திகதியிலிருந்து சகல நிறுவனங்களுக்கும் தமது வியாபார பதிவு இலக்கம் அல்லது வழங்கப்படும் விசேட அடையாள அட்டை இலக்கம் மற்றும் ஒரு விசேட தொலைபேசி இலக்கத்துடன் அவ் அரசாங்க நிறுவனத்திற்கு அல்லது வர்த்தக ஸ்தாபனத்திற்கு சொந்தமான சகல வாகனங்களையும் பதிவு செய்வதற்கான அனுமதி உரித்தாகும்.

அதன் பின்னர் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள தற்காலிக கியூஆர். பதிவினை நீக்க முடியும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## A/L பரீட்சை முடிவு...

பெறுபேறுகள் ஓகஸ்ட் 15ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிக்கு இடையே வெளியிடப்படும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது. அறிக்கை ஒன்றை வெளியிட்டு கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த இச் செய்தியை தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோதமாக தங்கியிருப்போர்...

அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான பகுதிகளில் இருந்து வெளியேறுமாறு கோட்டை பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். காலி முகத்திடல் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலுள்ள அனுமதியற்ற கட்டுமானங்கள் மற்றும் பயிர்களை உடனடியாக அகற்றுமாறு பொலிஸார் அறிவித்தல் விடுத்துள்ளனர். போராட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மாத்திரம் போராட்டங்களை முன்னெடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதியின் ஆசனத்தில்... 
(03ஆம் பக்கத் தொடர்)

இதேவேளை, அலரிமாளிகைக்குள் அத்துமீறி நுழைந்து மக்கள் பிரதிநிதிகள் போன்று செயற்பட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் ஜாஎல பிரதேசத்தில் தெற்கு குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கைது செய்யப்பட்டவர்கள் 35, 37 வயதுடைய குடெல்ல மற்றும் மாவெலிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

## சர்வகட்சி அரசாங்கத்தில்... 
(03ஆம் பக்கத் தொடர்)

மேலும் கூறுகையில்,

பல்வேறு அரச தலைவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் புதிய கூட்டத் தொடர்களில் உரையாற்றியுள்ளனர். அதே போன்று வரவு செலவுத் திட்ட உரைகளையும் கேட்டுள்ளேன். அதன்போது ஒரே விடயங்கள் சில அனைத்து உரைகளிலும் முன்வைக்கப்பட்டுள்ளன.இதன்படி தற்போதைய ஜனாதிபதியின் உரையிலும் இவற்றை தவிர வேறு எதுவும் கிடையாது.

## சபை ஒத்திவைப்பு விவாதம்... 
(03ஆம் பக்கத் தொடர்)

12ஆம் திகதிகளில் மு.ப 10.00 மணி முதல் பி.ப 4.30 மணிவரை பாராளுமன்றம் கூடவுள்ளது. இந்த விவாதம் சபை ஒத்திவைப்பு விவாதமாக இடம்பெறும் என்றும், விவாதம் நிறைவடையும்போது வாக்கெடுப்பு நடத்தப்படாது என்றும் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் 09ஆம் திகதி 2022ஆம் வருடத்துக்கான 2021ஆம் ஆண்டு 30ஆம் இலக்க நிதி ஒதுக்கீட்டுச் சட்டம் (வரவுசெலவுத்திட்டம்) தொடர்பில் முன்வைக்கப்படும் திருத்தச் சட்டமூலமும், எதிர்வரும் 10ஆம் திகதி 22வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அதேநேரம், பாராளுமன்றக் கூட்டத் தொடர் அண்மையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இரத்துச் செய்யப்பட்ட குழுக்களைப் புதிய கூட்டத் தொடரில்மீண்டும்நியமிப்பதுதொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதற்கு அமைய தெரிவுக் குழுவை (Committee of Selection) எதிர்வரும் 09ஆம் திகதி அமைத்த பின்னர் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு உள்ளிட்ட ஏனைய குழுக்களை விரைவில் நியமிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

## வங்கி ஊடாக நாட்டுக்கு பணம்...

வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

வெளிநாட்டு இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பும் பணத்தை கொண்டே எரிபொருள், எரிவாயு மற்றும் மருந்து என்பன கொள்வனவு செய்யப்படுகின்றன. வங்கிகளினூடாக நேரடியாக அனுப்பும் டொலர் கையிருப்பைக் கொண்டு இந்நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியும்.

அதனை ஊக்குவிக்கவே இந்த சலுகைகள் வழங்கப்படுவதாக தெரிவித்த அவர், இது தொடர்பான சுற்றுநிருபங்கள் விரைவில் வெளியாகுமென்றும் தெரிவித்தார்.

இது வரை 90 நாட்களுக்கும் குறைவான காலம் வெளிநாட்டிலிருந்த ஒருவருக்கு நாடு திரும்பியதும் 187.5 டொலர் வரிச்சலுகை பெறுவதற்கு உரிமையுள்ளது. ஒரு வருடம் இருந்தால் 625 டொலர் பெறுமதியாக சலுகை பெறலாம். ஒரு வருடத்துக்கு மேல் என்றால், 1,750 டொலர்கள் வரை பெறமுடியும் . இலங்கைக்கு டொலர்கள் அனுப்பினாலும், அனுப்பாவிட்டாலும் இந்த நிவாரணம் கிடைக்கும்.

இந்த வரிச்சலுகை மாற்றப்படாது. ஆனால் 90 நாட்களுக்குள் குறைந்தபட்சம் 2,400 டொலர்கள் நாட்டுக்கு அனுப்பப்பட்டிருந்தால், வரிச் சலுகை 787 டொலர்களாக அதிகரிக்கப்படும். ஒரு வருடமாக இருந்தால் 1,225 டொலர்கள் வரை வரிச்சலுகை அதிகரிக்கப்படும். அதனை விட கூடுதலாக அனுப்பினால் சலுகை 2,350 டொலர்கள் வரை அதிகரிக்கப்படும். அனுப்பும் தொகைக்கமைய வரிச்சலுகை கூடிக் கொண்டே செல்லும் என்றும் தெரிவித்தார்.

இரண்டாவது அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், வங்கிகளின் ஊடாக நாட்டுக்க பணம் அனுப்பும் எந்தவொரு இலங்கையருக்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம் வழங்கப்படும்.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையில் எந்த வகையிலும் வாகனம் இறக்குமதி செய்ய அனுமதி கிடையாது. ஆனால் 3,000 டொலர்களுக்கு மேல் வங்கி மூலம் பணம் அனுப்பியிருந்தால், அவர்கள் அனுப்பிய பணத்தில் அரைவாசிக்கு மின்சார மோட்டார் சைக்கிள் வாங்கலாம். முச்சக்கர வண்டிகளுக்கு இந்த அனுமதி வழங்கப்பட மாட்டாது.

20,000 டொலர்களிலிருந்து அதிகபட்சமாக 65,000 டொலர்கள் வரை அனுப்புவோருக்கு மின்சார வாகனம் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மின்சாரம் ஏற்ற சூரிய மின்கலங்களை அவர்கள் கொள்வனவு செய்ய வேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு...

காங்கிரஸ் தமது ஒத்துழைப்பை வழங்குமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் கட்சிகளின் யோசனைகளை கோரியுள்ள ஜனாதிபதிக்கு சாதகமான பதிலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வழங்குமென்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் பல்வேறு விடயங்கள் பாராட்டுக்குரியவை.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த சிந்தனைகள் அதில் உள்ளடங்கியிருந்தன. அவற்றை சாத்தியமாக்கும் வகையில் பல்வேறு விடயங்கள் அவரது உரையில் வெளிப்பட்டன.

அனைத்து தரப்பினரதும் யோசனைகளை பெற்றுத் தருமாறு இப்போதும் அவர் கடிதம் மூலம் எமக்குத் தெரிவித்துள்ளார்.

அவரது வேண்டுகோளுக்கிணங்க அவரது ஆலோசனைகளுடன் மேலும் சில விடயங்களை உள்ளடக்கி நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் வகையில் நாம் எமது யோசனைகளை அவருக்குத் தெரிவிக்கவுள்ளோம்.

அதன் பின்னர் எதிர்க்கட்சியில் அனைத்து தரப்பினரிடமும் பேச்சு வார்த்தை நடத்தி அதற்கான உரிய செயற்பாடுகளை நாம் மேற்கொள்வோம்.

நாம் கட்சி ரீதியாக ஜனாதிபதியின் கடிதத்திற்குப் பதில் வழங்கத் தயாராகவுள்ளோம். அதன் பின்னர் ஏனைய கட்சிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தி நாட்டின் பொருளாதாரத்துக்கு தீர்வு பெற்றுக் கொள்வதில் ஒத்துழைப்பு வழங்குவோம்.

அனைத்துக் கட்சிகளும் ஜனாதிபதி மேற்கொள்ளும் சிறந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் அதே வேளை எமது கட்சியின் ஒத்துழைப்பையும் நாம் வழங்குவோம் என்றார்.

## சர்வ கட்சி வேலைத் திட்டம்;...

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இணைந்து கொள்ளுமா இல்லையா என்பது தொடர்பில் தேசிய வேலைத் திட்டத்தை பரிசீலித்த பின்னரே தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையையடுத்து அது தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிகையிலேயே சுமந்திரன் எம்பி இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை ஒரு சிறந்த உரையாக நாம் பார்க்கின்றோம். தேசிய கொள்கை மற்றும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவர் முன்வைத்துள்ள தேசிய மக்கள் சபைக்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

அதற்கான கொள்கைகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் சர்வ கட்சி அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படுமானால் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்வோம்.

சர்வ கட்சி அரசாங்கத்தில் இணைவது தொடர்பில் இதுவரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எந்த வித தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லையா? என அவரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்:

ஜனாதிபதி எமக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். அதில் சர்வ கட்சி தேசிய வேலைத்திட்டம் தொடர்பாகவே அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கு நாம் எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவோம். அந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு சர்வ கட்சி அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படுமானால், அதன் போது அந்த அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்காக எமக்கு அழைப்பு விடுக்கப்படுமானால் சர்வ கட்சி வேலைத் திட்டத்தை பரிசீலித்த பின்னர் நாம் அதற்கான தீர்மானமொன்றை மேற்கொள்வோம்.

அவ்வாறு சர்வ கட்சி அரசாங்கம் அமையுமானால் அதில் அமைச்சர் பதவிகளைப் பொறுப்பேற்பதற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தயாராக உள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சுமந்திரன் எம்.பி, எவ்வாறாயினும் சர்வ கட்சி தேசிய வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்ட பின்னர் அதனை நாம் பரிசீலனை செய்த பின்னரே அது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இக்காலங்களில் ஒன்றிணைந்து செயல்படுவது அவசியமாகியுள்ள நிலையில் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை அதனை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சகல அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கி...

பிரகடன உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான திட்டங்கள் குறித்தும் அரசியலமைப்பு திருத்தம், தேசிய பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் கருத்து தெரிவித்த அவர், புதியதோர் பயணத்தை ஆரம்பிப்பதற்காக அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு பல வருட காலமாக தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியமை அத்தியாவசியமான காரணி ஒன்றாகும். யுத்தத்தின் மூலம் பாதிக்கப்பட்ட அவர்கள் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தீர்க்க வேண்டிய காணிப் பிரச்சினைகள் பல உள்ளன. வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக நாம் புதிதாக சிந்திக்க வேண்டியுள்ளது. வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கை தமிழ் மக்களுடன் நெருங்கிச் செயற்பட்டு, இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்துக்கு அவர்களது ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் நாம் எதிர்பார்க்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சி வீதத்தை ஸ்திரமான நிலைக்கு உயர்த்துதல் அரசாங்கத்தின் முயற்சியாக உள்ளதோடு, 2026 ஆம் ஆண்டளவில் நிலையான பொருளாதார அடித்தளத்தை உருவாக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2025 க்குள் முதன்மை வரவுசெலவு திட்டத்தில் உபரியாக இருக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது அரச கடன் மொத்த தேசிய உற்பத்தியில் 140 சதவீதமாக உள்ளது. 2032 ஆம் ஆண்டளவில் இதனை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு சதவீதத்துக்கும் குறைவான நிலைக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது அமர்வின் ஆரம்ப விழா மிக எளிமையாக நடைபெற்றது.

பாராளுமன்ற வளாகத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பாராளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க தசநாயக்க ஆகியோர் வரவேற்றனர்.

சம்பிரதாயமாக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு மாத்திரம் முன்னுரிமை அளித்து புதிய பாராளுமன்ற அமர்வு ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்த அமர்வை முப்படையினரின் மரியாதை செலுத்துதலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தவும் ஜனாதிபதிக் கொடியை பயன்படுத்தாமல் இருக்கவும் ஜனாதிபதி தீர்மானித்திருந்தார்.

பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக, கொழும்பு தேவி மகளிர் கல்லூரி மாணவிகள் ஜெயமங்கள கீதம் பாடி ஜனாதிபதியை வரவேற்றனர்.

ஜனாதிபதி தனது கொள்கை அறிக்கையை சபையில் முன்வைத்து, அரசாங்கத்தின் தேசிய பொருளாதாரக் கொள்கைகளின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் தொடருமானால், 2048 ஆம் ஆண்டில் சுதந்திரத்தின் 100ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நேரத்தில் இலங்கையை முழுமையாக அபிவிருத்தியடைந்த நாடாக மாற்ற முடியும் எனக்குறிப்பிட்டார்.

தனது கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்து ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

அமைதியான வழியில் போராடுவது மனிதனின் அடிப்படை உரிமை ஆகும். அந்த உரிமைகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் செயல்பாட்டாளர்களை வேட்டையாடப் போகிறேன் என்று சமூக வலைதளங்களில் பெரும் பிரசாரம் செய்ய சில குழுக்கள் முயற்சிக்கின்றன. ஆனால் அது உண்மையல்ல.

அமைதியான வழியில் போராடுபவர்களுக்கு எந்த விதமான பாதிப்பையும் ஏற்படுத்த நான் இடமளிக்க மாட்டேன். அமைதியான முறையில் போராடுபவர்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்காக முன்நிற்கவும் சிறப்புப் பணியகம் ஒன்றை நிறுவுவேன்.

எவ்வாறான சமூக மற்றும் அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதை தீர்மானிக்க மக்கள் பேரவையை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுப்பேன். இது தொடர்பாக அரசியல் கட்சிகள், பல்வேறு அமைப்புகள் மற்றும் ஆர்வமுள்ள அனைத்து மக்களிடமும் கருத்து கேட்கும் பொறிமுறை இந்த மக்கள் பேரவை மூலம் தயாரிக்கப்படும். குறிப்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மற்றும் ஈடுபடாத இளைஞர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க முன்வருமாறு அழைக்கிறேன். இன்று நான் நடும் மரத்தின் பலனை நான் அனுபவிக்க மாட்டேன் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால் நாளை, நம் குழந்தைகளும், வருங்கால சந்ததியும் அந்தப் பலனை அனுபவிப்பார்கள்.

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர், பொது நிறுவனம் (அரச தொழில் முயற்சி) என்ற பொருளாதாரக் கருத்தியல் இருந்தது. ஆனால் இப்போது முழு உலகமும் அது ஒரு தோல்வி மற்றும் பயனற்றது என்பதை ஒப்புக்கொள்கிறது. சோசலிச நாடுகளான சீனா மற்றும் வியட்நாம் கூட இப்போது அரச தொழில் முயற்சி என்ற கருத்தியலை செயற்படுத்துவதில்லை. இந்த பழைய கருத்தை நாம் தொடர்ந்து கடைப்பிடித்தால், நம் நாடு மேலும் வீழ்ச்சியடைவதை யாராலும் தடுக்க முடியாது. எனவே, நஷ்டத்தில் இயங்கும் இந்த அரச தொழில் முயற்சிகளை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து கொள்கை ரீதியான முடிவுகளை எடுக்க வேண்டும்.

இதுவரை மேற்குலக நாடுகள் தான் உலகின் பொருளாதார வல்லரசுகளாக இருந்தன. ஆனால், 21ஆம் நூற்றாண்டு முடிவதற்குள் உலகின் சக்திவாய்ந்த பொருளாதாரம் இந்து சமுத்திரப் பிராந்திய பகுதிக்குச் சொந்தமாகிவிடும். இத்தகைய பின்னணியில், நமது நாட்டின் புவியியல் அமைவிடம் மிகவும் முக்கியமானது. இந்த சாதகமான நிலையை நாம் அதிகம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நமது எதிர்கால நிறுவன சட்டங்களும் கொள்கைகளும் இதை மனதில் வைத்து உருவாக்கப்பட வேண்டும்.

எல்லா நேரத்திலும் கடன் வாங்கி நாட்டை நடத்த முடியாது. முடிந்தவரை கடன் வாங்குவதை குறைக்க வேண்டும். எனவே, இந்து சமுத்திரத்தை மையமாகக் கொண்ட புதிய பொருளாதார சக்தியால் நமது நாடு பயனடையும் வகையில் விதிகள் மற்றும் கொள்கைகளை வகுக்க உங்களுடன் இணைந்து செயல்படுகிறேன்.

திருகோணமலையிலுள்ள எண்ணெய் தாங்கி வளாகத்தை இந்தியாவுடன் இணைத்து அபிவிருத்தி செய்ய தயாராக இருந்த வேளையில் அதனை இந்தியாவுக்கு விற்கிறார்கள் எனக் கூறி அபிவிருத்தி திட்டங்களை முடக்கினர். அன்று எண்ணெய் தாங்கி வளாகத்தை நாம் மேம்படுத்த முடிந்திருந்தால், இன்று மக்கள் எரிபொருள் வரிசையில் நாட்களைக் கடத்த வேண்டிய அவசியமில்லை.

சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவை தொடங்கப்பட்டபோதும் இதே போன்ற எதிர்ப்பு எழுந்தது. சுவசெரிய அம்பியூலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு வந்தால் உயிரிழப்பு நேரிடும் என்று சில மருத்துவர்கள் ஊடக சந்திப்பு நடத்த நடவடிக்கை எடுத்தனர். ஆனால் நாங்கள் எப்படியோ சுவசெரியவை ஆரம்பித்ததால், இதுவரை பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

இலகு ரயில் சேவையை நிறுவுவதிலும், துறைமுகத்தை மேம்படுத்தவும் ஜப்பான் முன்வந்தபோது, அடிப்படையற்ற மற்றும் சிறு பிள்ளைத்தனமான காரணங்களைக் கூறி அதனை எதிர்த்தனர். இதன் காரணமாக, நமது நாடு பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த மூன்று (03) பில்லியன் டொலர்களுக்கு மேல் நாடு இழந்தது.

( 09 வது பாராளுமன்றத்தின் மூன்றாவது அமர்வில் ஜனாதிபதி ஆற்றிய முழுமையான உரை 05 ஆம் பக்கம் பார்க்கலாம்.)

## ஜோசப் ஸ்டாலின் நேற்று கைது...

28 ஆம் திகதி இலங்கை வங்கி மாவத்தையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட அவர் கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

## ஜனாதிபதியின் அழைப்பை...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஜுலை 29 ஆம் திகதி சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான கலந்துரையாடல்களுக்கு அழைப்பு விடுத்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

அதற்கமைய ஜனாதிபதியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள குறித்த கடிதத்திற்கான பதில் கடிதத்திலேயே எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது :

'தற்போது எமது தாய் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார, அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அதனைக் கருத்திற் கொண்டு 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் பாராளுமன்ற கண்காணிப்பு முறைமையை மீண்டும் நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக உங்களால் விடுக்கப்பட்டுள்ள அழைப்பினை ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்துள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## 10 அரசியல் கட்சிகளும்...

சுயாதீனமாக செயற்படும் 10 அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தமது கோரிக்கைக்கு ஜனாதிபதி அளிக்கும் பதிலின் அடிப்படையில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது குறித்து தீர்மானம் எடுப்போம் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். பாராளுமன்றத்தை பிரதிநித்துவப்படுத்தும் 10 கட்சிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற கூட்டத்தின் போது இந்த விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள சந்திப்பின் போது ஜனாதிபதியிடம் தமது யோசனைகளை முன்வைக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாட்டின் இறைமையையும் தேசிய வளங்களையும் பாதுகாத்து ஜனாதிபதி தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பதே தமது பிரதான கோரிக்கை என கூறினார்.

வேலைத்திட்டம் இன்றி அனைத்துக் கட்சி அரசாங்கத்தினால் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## சர்வகட்சி செயற்பாடுகளுக்கு...

செயற்பாடுகளுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஒத்துழைக்க தயாராக உள்ளதாகவும் அக்கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஜனாதிபதி தனது கொள்கை திட்டத்தை நாட்டுக்கு முன் வைத்தார். அவரின் கருத்துக்களை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அவற்றை நிறைவேற்றினால் நாட்டுக்கு நல்லதாகவே அமையும். கட்சி என்ற ரீதியில் அதற்கு ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கிறோம்.

அமைச்சுப் பதவிகளை நாம் கேட்பது தொடர்பில் எந்தப் பேச்சு வார்த்தையும் நடைபெறவில்லை. சர்வகட்சி செயற்திட்டத்திற்கு ஒத்துழைக்க கோரி அவர் எமக்கு கடிதம் அனுப்பி இருந்தார். அதற்கு உடன்பாடு தெரிவித்து நாம் பதில் கடிதம் அனுப்பி இருக்கிறோம். எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாம் ஜனாதிபதியை சந்திக்க இருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## கொள்கை பிரகடன உரையில்...

உள்வாங்கி இருப்பதாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார். ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் கருத்து தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அரசியல், சமூக, பொருளாதார, கலாசார அனைத்து பிரச்சினைகளுக்கு பிரதான காரணமாக இனப் பிரச்சினையை குறிப்பிடலாம். இது சிங்கள பௌத்த நாடு அல்ல. பன்மை தன்மையை அவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார். அவர் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் தவறவிடுகிறார். அவர் சொன்ன விடயங்களை செயற்படுத்தி நாட்டை முன்னேற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். மலையகத் தமிழர்களின் பிரச்சினை குறித்தும் குறிப்பிட வேண்டும் என நாம் ஜனாதிபதியிடம் கேட்டிருந்தோம். அதன்படி அவர் அதனை தனது உரையில் உள்வாங்கி இருந்தார். தேநீர் விருந்தின் போது அவரை சந்தித்தேன். நான் கூறிய மலையக மக்கள் தொடர்பான விடயங்களை தனது உரையில் சேர்த்து இருப்பதை அவர் நினைவுபடுத்தினார். நானோ எனது தரப்பினரோ அமைச்சுப் பதவிகள் ஏற்பதை விட எமது மக்கள் நன்றாக வாழ வேண்டும் என்பதே பிரதானமானது என்றும் மனோகணேசன் எம்.பி தெரிவித்தார்.

## காத்தான்குடியில் பெருந்தொகை...

ஒழுங்கையில் பதுக்கி வைத்து அதிக விலைக்கு டீசல் விற்பனை செய்தார் எனக் கூறப்படும் இளம் வர்த்தகர் ஒருவரை (2) செவ்வாய்க்கிழமை மாலை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அவரது வர்த்தக நிலையை களஞ்சியசாலையில் பதுக்கி வைக்கப்பட்டு எட்டு பெரல்களில் அடைக்கப்பட்டிருந்த 1,510 லீற்றர் டீசலை காத்தான்குடி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கமைய காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டுதலுடன் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரஹீம் தலைமையில் சென்ற பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இந்த டீசல் கைப்பற்றப்பட்டதுடன் குறித்த சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த டீசல் கூடிய விலைக்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்ததாக ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்

கைப்பற்றப்பட்ட டீசலையும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பெண்ணொருவருக்கு நீதி...

வழக்கில் இருவருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் குற்றவாளிகளுக்கு தலா 10 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனையும் தலா 05 இலட்சம் ரூபா நட்ட ஈடும் விதித்து உத்தரவிட்டுள்ளார்.

நட்ட ஈட்டை செலுத்தத் தவறும் பட்சத்தில், மேலும் 2 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இரண்டு குற்றவாளிகளுக்கும் 5000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் ஒரு மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

நெளுக்குளத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி முச்சக்கரவண்டியில் பெண் ஒருவரை ஏற்றிச் சென்ற இருவர் அப்பெண்ணை கூட்டு பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தியுள்ளனர்.

அதற்கமைய, இரண்டு பிரதிவாதிகளையும் குற்றவாளிகள் என வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

குற்றம்சாட்டப்பட்ட இரண்டு குற்றவாளிகளில் ஒருவர் மாத்திரமே நேற்று மன்றில் முன்னிலையாகியிருந்ததுடன், அவருக்கான தண்டனை நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வழக்கின் மற்றைய குற்றவாளி இந்தியாவில் தலைமறைவாகியுள்ளதால், அவரை கைது செய்வதற்கான பிடியாணை உத்தரவை பிறப்பித்து, வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

## ஜனாதிபதிக்கு தமிழ்த் தரப்பு...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று (03) ஆற்றிய சிம்மாசன உரை தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர், தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளும் ஜனாதிபதியின் சிம்மாசன உரையில் பிரதிபலித்திருக்கின்றமையை வரவேற்பதாகவும், இவ் விடயங்கள் படிப்படியாக முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்படுவதற்கு, பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், ஈ.பி.டி.பி. கட்சியினால் அண்மையில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் முன்வைக்கப்பட்டிருந்த, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கான தீர்வு மற்றும் காணிப் பிரச்சினைகள், யுத்தப் பாதிப்புகளை நிவர்த்தி செய்தல் உட்பட்ட விடயங்கள் தீர்க்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஜனாதிபதியினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனை எமது தேசிய நல்லிணக்க முயற்சிகளுக்கும் அரசியல் அணுகுமுறைகளுக்குமான வெற்றியாகவே கருதுகின்றோம்.

இவ்வாறான சூழல்களை ஏனைய தமிழ் தரப்புக்களும் எமது மக்களின் அபிலாசைகளை முன்னகர்த்துவதற்கான சந்தர்ப்பங்களாக பயன்படுத்த வேண்டும்.

குறிப்பாக ஜனாதிபதியினால் உருவாக்க முயற்சிக்கப்படுகின்ற அனைத்துக் கட்சி அரசாங்கத்தினை தமிழ் மக்களின் அபிலாசைகளை முன்னகர்த்துவதற்கான ஆரோக்கியமான தளமாக அனைத்து தமிழ் தரப்புக்களும் பயன்படுத்த வேண்டும் " எனவும் தெரிவித்துள்ளார்.

# நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு நம்பிக்கையுடன் ஒன்றிணையுங்கள்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று ஆற்றிய கொள்கைப் பிரகடன உரையில் அனைத்துத் தரப்பினருக்கும் அறைகூவல்

பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை நம்பிக்கையைப் பெற்றுக்கொண்ட நபர் என்ற வகையில் நான் கடந்த 20 ஆம் திகதி ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டேன். இன்றைய தினத்திலே ஜனாதிபதியாக நான் முதல் முறையாக உரையாற்றுகின்றேன்.

இச்சபையினை இலங்கையின் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் மற்றும் ஏனைய இனத்தவர்கள் ஆகிய யாராக இருந்தாலும் நீங்கள் இந்த இடத்திலே இலங்கைப் பாராளுமன்றம் என்ற ரீதியிலேயே ஒன்றுகூடுகின்றீர்கள்.

எமது நாட்டிலே வாழுகின்ற மக்களும் பல்வேறு இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். அவ்வாறு எந்த இனத்தைப் பிரதிநிதித்துவம் செய்தாலும் நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற ரீதியிலேயே செயற்படுகின்றோம். நான் இன்று உங்கள் முன் அனைத்து இலங்கையர்களினதும் ஜனாதிபதியாகவே உரையாற்றுகின்றேன்.

எமது நாடு பல்வேறு கலாசாரங்களை கொண்டுள்ள, பல்வேறு சமயங்களை பின்பற்றுகின்ற, பல்வேறு மொழிகளை பேசுகின்ற மக்களைக் கொண்டுள்ளது. கலாசார விழுமியங்களை பேணி வருவதற்கும், சமயங்களை பின்பற்றுவதற்கும் மற்றும் தமது தாய்மொழியை பயன்படுத்துவதற்கும் அனைவருக்குமுள்ள உரிமையை உங்கள் ஜனாதிபதி என்ற வகையில் நான் பாதுகாப்பேன்.

அவ்வாறே அரசியலமைப்பின் பிரகாரம் பௌத்த சமயத்துக்கு முன்னுரிமையளித்து, பௌத்த சமயத்தைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்கும் அனைத்து சமயங்களினதும் உரிமைகளை பாதுகாப்பதற்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

எமக்கு சமய, கலாசார, சமூக ரீதியான மாத்திரமன்றி, பொருளாதார ரீதியாகவும் சிறந்த தொரு பாரம்பரியம் உரித்தாக உள்ளது. அது பல்வேறு கலாசாரங்களினால் வளர்ந்துள்ளது. நான்கு வரம் கடவுள்கள் பற்றிய எண்ணகருவானது அவ்வாறே பௌத்த சமயத்துடன் தொடர்புபடுகின்றது. இவ்வாறான பாரம்பரிய மரபுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பு இன்று எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நான் கஷ்டத்தில் விழுந்திருந்த ஒரு நாட்டையே பொறுப்பேற்றேன். கடுமையான பொருளாதாரப் பிரச்சினை ஒருபுறம், பாரிய மக்கள் எதிர்ப்பு மறுபுறம். எனினும் நாட்டுக்காக இந்த கடினமான சவாலை பொறுப்பேற்க நான் தீர்மானித்தேன். அதற்குக் காரணம் இருளுக்கு சாபமிட்டுக் கொண்டு இருப்பதை விட ஒரு விளக்கினையேனும் ஏற்றுவது நாட்டிற்காக நான் செய்யும் கடமை என நான் கருதியமையாகும்.

நாம் இன்று நவீன வரலாற்றிலே ஒருபோதும் எமது நாடு முகம்கொடுத்திராத கடுமையான பிரச்சினையொன்றுக்கு முகம்கொடுத்துள்ளோம். நாம் பாரிய அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளோம். அதிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணையும் சவாலை வெற்றிகொண்டால் மாத்திரமே முடியும். இந்த பாராளுமன்றத்தில் இருக்கும் கௌரவ உறுப்பினர்களும் அவ்வாறே நாட்டு மக்கள் அனைவரும் நாட்டினைக் கட்டியெழுப்பும் முயற்சிக்கு தத்தமது சக்திக்கு உட்பட்டவாறு பங்களிப்புச் செலுத்துவது மிகவும் இன்றியமையாததாகும்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக பாராளுமன்றத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என்பதே இச்சந்தர்ப்பத்தில் பெரும்பாலான நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும். ஒன்றிணையும் பட்சத்தில் எம்மால் நாட்டினைக் கட்டியெழுப்ப முடியும். பிரிந்து சென்றால் இப்பாராளுமன்றத்தில் இருக்கும் மக்கள் பிரதிநிதிகள் மாத்திரமன்றி முழு நாட்டு மக்களும் துன்பத்திற்கும் அழிவிற்கும் ஆளாகுவர்.

எனவே சர்வகட்சி அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்காக ஒன்றிணையுமாறு நான் மீண்டும் இந்த பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துத் தரப்பினரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். நாம் உங்கள் அனைவருக்கும் நட்பின் கரத்தை கௌரவத்துடன் நீட்ட விரும்புகின்றேன். கடந்த காலத்தினை பின்தள்ளிவிட்டு நாட்டினைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணையுமாறு நம்பிக்கையுடன் அழைப்பு விடுக்கின்றேன். சர்வகட்சி அரசாங்கம் பற்றி அரசியல் கட்சிகளுடன் நடாத்தும் பேச்சுவார்த்தையினை நான் ஏற்கனவே ஆரம்பித்துள்ளேன்.

எனது வேலைத்திட்டத்தை ஆராய்ந்து, அதன் பின்னர் சர்வகட்சி அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்கு இணக்கப்பாட்டினைத் தெரிவிப்பதாக சில தரப்பினர் தெரிவித்திருந்தனர். அது பற்றியும் இங்கு கருத்துக் கூற விரும்புகிறேன். சர்வகட்சி அரசாங்கம் என்பது ஒரு கட்சியின் தனி விருப்பத்திற்கேற்ப செயற்படுகின்ற அரசாங்கமொன்றல்ல. அது பொது கொள்கை வட்டத்தினுள் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களின் பிரகாரம் பயணிக்கும் அரசாங்கமொன்றாகும். நம் அனைவரினதும் கருத்துக்களின் பிரகாரம் செயற்படும் அரசாங்கமொன்று. நாட்டிற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுத்துச் செல்லுகின்ற ஒரு அரசாங்கமாகும்.

விரைவில் இந்த அரசியல் நெருக்கடியினைத் தீர்த்துக் கொண்டு ஸ்திரத்தன்மை ஒன்றினை ஏற்படுத்திக் கொள்வதற்காக சர்வகட்சி அரசாங்கம் ஒன்றின் முக்கியத்துவம் பற்றி நான் இச்சபைக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

பொருளாதாரம் சரிந்து விழுந்ததனால் எமது நாடு பொருளாதார நெருக்கடிக்குத் தள்ளப்பட்டது. இவ்வாறு எமது பொருளாதாரம் ஏன் சரிந்து விழுந்தது? எமது பொருளாதார முறைமைகள் எவ்வாறு அமைய வேண்டுமென்பது பற்றி நாம் இன்று மூன்று நான்கு தசாப்தங்களாக விவாதித்து வருகின்றோம். 1977 ஆம் ஆண்டு எமது நாட்டிற்கு புதிய பொருளாதார முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் காலத்திற்கு பொருந்தக் கூடியவாறு அதனை எம்மால் நவீனமயப்படுத்த முடியவில்லை. பொருளாதாரத்தை நவீனமயப்படுத்துவதற்கு கவனம் செலுத்தாது போட்டித்தன்மை, தூரநோக்கற்ற அழிவுமிக்க குறுகிய அரசியலில் நாம் ஈடுபட்டோம். யுக்ரேன் யுத்தம் மற்றும் கொவிட் தொற்று என்பன காரணமாக உலகின் பிரதான பொருளாதாரங்கள் சரிந்து விழுதல் உள்ளிட்ட சர்வதேசத்தில் இடம்பெற்ற அனுகூலமான பொருளாதாரக் காரணிகள் எமது நெருக்கடியை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கின.



இந்த அனைத்துக் காரணிகளினாலும் எமது நாடு மிகவும் பாதாளத்திற்குத் தள்ளப்பட்டது. மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகினர். தற்போது நாம் விழுந்த இடத்திலிருந்து மீண்டெழுவதற்கான முயற்சியினை ஆரம்பித்துள்ளோம்.

தற்போதுள்ள மின்வெட்டினை குறைத்துக் கொள்ள எம்மால் முடிந்துள்ளது. பயிர் செய்கைக்காக எதிர்காலத்தில் தேவைப்படும் உரத்தைக் கொண்டு வருவதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. சமையல் எரிவாயு பிரச்சினை தற்போது முழுமையாக தீர்க்கப்பட்டுவரும் நிலையில் உள்ளது. வரிசையில் காத்திருக்காது சமையல் எரிவாயுவை இன்னும் சில தினங்களில் அனைவராலும் பெற்றுக் கொள்ள முடியும். உணவுத் தட்டுபாடொன்று ஏற்படாதவாறு அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றினைக் கொள்வனவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதித் துறை என்பவற்றிற்கு ஏற்பட்டுள்ள தடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## சர்வகட்சி அரசாங்கம் தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பம்

மீளெழும் முயற்சியிலே எமது அயல் நாடான இந்தியா வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாக நான் விசேடமாக இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலான இந்திய அரசாங்கம் எமக்கு வழங்கிய உயிர் மூச்சுக்கு நான் இலங்கை மக்கள் சார்பாக பிரதமர் மோடி அவர்களுக்கும், இந்திய அரசாங்கத்திற்கும், இந்திய மக்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

தற்போது எமது முன்னால் உள்ள குறுங்கால பிரச்சினை அமைவது எரிபொருள் தட்டுப்பாடாகும். எரிபொருளை கொண்டு வருவதற்காக ஏனைய நாடுகளிடமிருந்து கடன் உதவிகள் கிடைக்கும் வரையில் காத்திருக்கும் முறைமையிலே நாம் முடிவுக்கு கொண்டு வருதல் வேண்டும். எனவே எமது நாட்டின் ஏற்றுமதி வருமானம் மற்றும் வெளிநாட்டு நாணயமாற்று ஊடாக எரிபொருளை கொண்டு வருவதற்கான முறைமை ஒன்றினை நாம் ஆரம்பிக்க உள்ளோம். இதன் போது எரிபொருளுக்கான கொடுப்பனவினை சமப்படுத்திக் கொள்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகளை வரையறுத்துக் கொள்ள வேண்டியும் எமக்கு ஏற்படும். மறுபுறமாக எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்த வேண்டியும் ஏற்படும். எனவே இந்த ஆண்டின் இறுதி வரையில் இந்த கஷ்டத்தினை நாட்டுக்காக நாம் தாங்கிக்கொள்ளல் வேண்டும்.

பொருளாதார நெருக்கடி காரணமாக நாம் அனைவரும் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றோம், துன்பப்படுகின்றோம், கஷ்டப்படுகினறோம், சிக்கல்களுக்கு ஆளாகின்றோம். இவ்வாறான கஷ்டங்கள் மற்றும் துன்பங்கள் என்பவற்றிலிருந்து விடுபடுவதற்கான பாதையை நோக்கி இந்நாட்டினைக் கொண்டுசெல்வதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்புடன் நான் நடவடிக்கை எடுப்பேன்.

இந்தக் கஷ்டங்களிலிருந்து மீழுவதற்கு நாம் நீண்ட கால தீர்வுகளை நோக்கிப் பயணித்தல் வேண்டும். மீண்டும் ஒருபோதும் எமது நாட்டிலே இவ்வாறான பொருளாதார நெருக்கடியொன்று ஏற்படாதவாறு பலமிக்க அடித்தளமொன்றினை இடுதல் வேண்டும். பொருளாதாரத்தை நவீனமயப்படுத்துதல் வேண்டும். பொருளாதார ஸ்திரத்தன்மையினை ஏற்படுத்தி, போட்டித்தன்மைமிக்க சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் பக்கம் மாற்றியமைத்தல் வேண்டும். அவற்றிற்குத் தேவையான அறிக்கைகள், திட்டமிடல், சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றினை தற்போது நாம் தயாரித்து வருகின்றோம்.

நான் இன்று உங்கள் முன்னிலையில் தெளிவுபடுத்துவது எங்கள் எதிர்காலத்துக்கு அடிப்படையாகும் திட்டமிடல் சட்டகமாகும். இச்சட்டகத்தினுள் நாம் நடைமுறைப்படுத்தும் செயல்திட்டங்கள் என்பவை தொடர்பான விபரமான தகவல்கள் எதிர்காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இடைக்கால வரவுசெலவு மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தினூடாக முன்வைக்கப்படும்.

மீளெழுச்சிபெறும் ஆரம்பக் கட்டமொன்றாக நாம் சர்வதேச நிதியத்தோடு நான்கு வருட வேலைத் திட்டமொன்று தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பித்தோம். ஒகஸ்ட் மாதத்திலிருந்து நாம் அந்தக் கலந்துரையாடல்களை மீண்டும் முன்னெடுத்துச் செல்வோம். ஆரம்ப கட்ட உயர்மட்டத்திலான கலந்துரையாடல்களைச் துரிதமாகவும் சிறப்பான முறையிலும் முடிப்பது எமது எதிர்பார்ப்பாகும்.

சர்வதேச நிதியம் மற்றும் சட்ட நிபுணர்களான லசாட் மற்றும் கிளிபட் சான்ஸ் நிறுவனங்களோடு சேர்ந்து கடன் நிலைபடுத்தும் திட்டம் தற்போது முடியுறும் தறுவாய்க்கு வந்துள்ளது. இந்தத் திட்டத்தை இன்னும் சில தினங்களில் நாம் சர்வதேச நிதியத்திடம் முன்வைப்போம். அதன்பின்பு எமக்கு கடன் உதவிகள் வழங்கியுள்ள நாடுகளோடு கலந்துரையாடுவோம். அதன்பின்பு தனியார் கடனாளிகளோடும் கலந்துரையாடல்களை ஆரம்பிப்போம். அவர்களோடு உடன்பாட்டுக்கு வருவோம்.

இறுதியாக ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை வகுப்போம். எமது கடந்த கால பொருளாதார உரிமை வெளிநாட்டு வர்த்தகமாகும். கடந்த காலத்தில் இலங்கையை கடல் பட்டுப்பாதையில் அமைந்த பிரதான பொருளாதாரக் கேந்திர நிலையமொன்றாக இனங்கண்டிருந்தார்கள். இலங்கை ஒரு காலத்தில் கீழைத்தேய தானிய களஞ்சியமொன்றாக அறிமுகமானது அதனால்தான். முழு வலயத்திலும் இருந்த அரிசியை உலகம் பூராகவும் பகிர்ந்தளிக்கும் மத்திய நிலயமாக இலங்கை இருந்தது.

அந்தக் கடந்தகால உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுவதன் மூலம் வலுவான மற்றும் அபிவிருத்தியான பசுமை பொருளாதாரமொன்றை உருவாக்குவதே எமது இறுதி இலக்காக இருந்தது. காலநிலை மாற்றங்கள் எதிர்கால உலகம் முகம்கொடுக்கும் பாரிய பிரச்சினையொன்று என்பதை இனங்கண்டுள்ளோம். காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளக் கூடிய வலுவான பொருளாதாரமொன்றை நாம் உருவாக்குதல் வேண்டும். மகாபராக்கிரமபாகு அரசர் கூறியதுபோல வானத்திலிருந்து விழும் ஒருதுளி நீரைக்கூட வீணாகப்போகாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று நாம் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியின் பிரதிபலனாக இருப்போர், இல்லாதோர் இடைவெளி விரிவடைந்து கொண்டு செல்கின்றது. நடுத்தர வகுப்பினர் சுருங்கிச் செல்கின்றார்கள். இன்னுமொரு பக்கத்தில் தொழில்முயற்சிகள் மற்றும் கைத்தொழில்கள் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்கின்றது. தொழில்கள் இல்லாது போகின்றது.

கடந்த காலத்தில் வெளிநாட்டு ஊழியர்கள் இலங்கைக்கு அனுப்பும் நிதியின் அளவு குறைந்து விட்டது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. கொவிட் தொற்றுப்பரவல் காரணமாகப் பல தொழில்கள் இல்லாது போனது. தொழில்களுக்காக வெளிநாடு செல்வோர் குறைந்துள்ளனர். ரூபாயின் பெறுமதியைச் செயற்கையாகக் கட்டுப்படுத்தியதன் காரணமாக வேறு முறைகளின் மூலம் இலங்கைக்கு பணம் அனுப்புதல் மிகவும் இலாபகரமானதாக இருந்தது. தற்போது படிப்படியாக இந்நிலைமை மாற்றமடைந்து வருகின்றது. வங்கி முறைமையினூடாக இலங்கைக்குப் பணம் அனுப்புதலை ஊக்குவிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்

## சமூக மாற்றங்களுக்காக அர்ப்பணிப்போடு செயற்படுவேன்

பொருளாதாரத்தை நிலைபேறுடையதாக்கும் முயற்சியின்போது சமூகத்தின் வலுவற்ற மற்றும் நிர்க்கதியானோர் தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்துவோம். நாட்டின் தொழில்முயற்சியாளர்களுக்கு தங்களது ஆற்றல்களினூடாக முன்வருவதற்குத் தேவையான வழிகளை மேலும் விரிவுபடுத்துவதோடு சமூகத்தில் கீழ்மட்டத்தில் வசிக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம். நாடு பூராகவும் வசிக்கும் ஏழை மக்களுக்கு குறுகியகால நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நீண்டகால வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம். நான் சமூக மாற்றங்களுக்காக அர்ப்பணிப்போடு செயற்படுவேன்.

நான் எதிர்காலத்திற்காக மேற்கொள்ள வேண்டிய நேர்மறையான சமூக மாற்றங்களுக்காக அர்ப்பணிப்பேன். மீண்டும் விரிவான நடுத்தர வர்க்கத்தினரை உருவாக்குவதற்குத் தேவையான அடிப்படையை உருவாக்குவேன். சமூக சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் ஊடாக நன்மைகள் முழு சமூகத்திற்கும் நியாயமானவாறு பெற்றுக் கொடுப்பேன்.

இக்குறிக்கோள்களை ஈடேற்றும் செயற்பாடுகளுக்காகச் சமூக நியாயாதிக்க ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன்.

இற்றைக்கு நான்கு அல்லது ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் அரச தொழில்முயற்சிகள் தொடர்பில் பொருளாதார எண்ணக்கருவொன்று இருந்தது. ஆனாலும் அது தோல்வியான மற்றும் வினைத்திறனற்றதென்பதை தற்போது முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. சோசலிச நாடுகளான சீனா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளும் தற்போது அரச தொழில்முயற்சிகளை செயற்படுத்துவதில்லை. நாம் மேலும் பண்டைய எண்ணக்கருக்களில் தங்கிநின்றால் எமது நாடு மேலும் கீழ்நோக்கிச் செல்வதைத் தடுப்பதற்கு யாருக்கும் முடியாமல் போகும். ஆகையினால் இவ்வாறு நட்டமடையும் அரச முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வது எவ்வாறு என்பதுபற்றி எமக்கு கொள்கைரீதியான தீர்மானங்களை எடுக்கவேண்டிவரும்.

இற்றைவரை உலகத்தில் பொருளாதார வல்லமைகொண்ட நாடுகளாக மேற்குலக நாடுகளே இருந்தன. ஆனாலும் 21 ஆம் நூற்றாண்டு முடிவடைவதற்கு முன்னதாக உலகத்தில் வலுவான பொருளாதாரம் இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கு உரித்தாகும். அவ்வாறான பின்புலத்தில் எமது நாட்டின் புவிசார் அமைவு மிகவும் முக்கியமானதாகும். நாம் இந்த இலாபகரமான அமைவின் உச்சப் பயனை பெற்றுக்கொள்ள வேண்டும். இதனை மனதில் நிறுத்திக்கொண்டு எமது எதிர்கால நிறுவன சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுத்தல் வேண்டும். தினந்தோறும் கடன் பெற்றுக் கொள்வதன் மூலம் நாட்டை முன்கொண்டுச் செல்ல எம்மால் முடியாது. கடன் எடுப்பதை இயன்ற அளவு குறைத்துக்கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆகையினால் இந்து சமுத்திர கேந்திரீய புதிய பொருளாதார வலுவினால் எமது நாட்டுக்கு உச்சபட்ச பயனை பெற்றுக்கொள்ளக்கூடிய சட்டதிட்டங்கள் மற்றும் கொள்கைகளை நான் உங்களோடு சேர்ந்து வகுப்பேன்

இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகப் பாடுபடும்போது சம்பிரதாய சிந்தனையிலிருந்து விடுபடுமாறு நான் சகல தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கின்றேன். வெறுமனே அதிக வட்டிக்கு வர்த்தகக் கடன்களைப் பெற்றுக்கொள்ளும்போது அமைதியாகப் பார்த்திருந்த சில குழுக்கள் நாட்டுக்கு பொருத்தமான முதலீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். பொய்யான பலிக்கடாக்களை உருவாக்கி மக்களை திசைதிருப்புகின்றார்கள்.

யாரேனும் சொல்வதை ஆராய்ந்து பார்க்காமல் ஏற்றுக்கொண்டு வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதனால் எமது நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பை அளவிட முடியாது. ஊழல் மற்றும் மோசடி ஊடாக நாட்டின் நிதி மற்றும் வளங்களைக் களவாடியதனால் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்புகள்பற்றி மக்கள் அறிவார்கள். ஆனாலும் பொய் பலிக்கடாக்களை எடுத்துக்காட்டி வெளிநாட்டு முதலீடுகளைத் தடைசெய்து நாட்டுக்கு ஏற்படுத்திய இழப்பு கணக்கிட முடியாத அளவுக்கு விசாலமானதாகும்.

நான் உதாரணங்கள் பலவற்றை எடுத்துக் காட்டுகின்றேன்.

இந்தியாவோடு ஒன்றிணைந்து திருகோணமலை எண்ணெய்த்தாங்கித் தொகுதியினை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்போது இந்தியாவுக்கு இலங்கையை விற்கின்றார்கள் என்று கூறி அபிவிருத்தித் திட்டத்துக்கு இடையூறு விளைவித்தனர். அன்று எமக்கு எண்ணெய்த்தாங்கித் தொகுதியினை அபிவிருத்தி செய்துகொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பின் இன்று மக்களுக்கு எரிபொருள் வரிசைகளில் நீண்டநாட்கள் அலைவதற்கு அவசியம் ஏற்பட்டிருக்காது.

சுவசெரிய நோய் காவு வண்டிகளின் சேவையை ஆரம்பிக்கும்போது அதே போன்று எதிர்ப்புகளைச் செய்தார்கள். சுவசெரிய நோய் காவு வண்டிகள் வைத்தியசாலைகளுக்கு வந்தால் ஏற்படுவது மரணம் எனக்கூறி சில வைத்தியர்கள் ஊடகக் கலந்துரையாடல்கள் நடத்தினார்கள். ஆனாலும் நாம் எவ்வாறாயினும் சுவசெரியவை ஆரம்பித்ததனால் தற்போது பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்களை வழிதவறி நடத்தி தடைசெய்த கருத்திட்டங்கள் காரணமாக எமது பொருளாதாரக் கட்டமைப்பு அழிவடைந்தது.

இலகு புகையிரதச் சேவையைத் தாபிப்பதற்கும், துறைமுகத்தை மேம்படுத்துவதற்கும் ஜப்பான் நாடு முன்வந்த சந்தர்ப்பத்தில் அதற்கெதிராக அடிப்படையற்ற வீணான காரணிகள் பலவற்றை எடுத்துக்காட்டியதன் காரணமாக எமது நாட்டுக்குக் கிடைப்பதற்கிருந்த 3 பில்லியன் டொலருக்கு அதிகமான அளவு கிடைக்காமல் போயிற்று. அதுமட்டுமன்றி ஜப்பான் மற்றும் இலங்கைக்கிடையே இருந்த நீண்டகால நட்பு சிதறிப் போனது.

இக்கருத்திட்டங்களை எமக்குப் பெற்றுத் தருவதற்கு தலைமை தாங்கியவர் இலங்கையின் உற்ற நண்பனான முன்னாள் ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபே அவர்களாவார். அவர் அண்மையில் படுகொலை செய்யப்பட்டார். எமது சமய நம்பிக்கைப்படி நான் அபே அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்க விரும்புகின்றேன்.

(மிகுதி நாளை)

**நாடு மீண்டெழும் முயற்சியில் வழங்கிய ஒத்துழைப்புக்காக பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கத்துக்கும், இந்திய மக்களுக்கும் நன்றிகள்**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 19ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 05

### குறள் தரும் சிந்தனை



அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு

*அன்பான குணமும், புகழ்வாய்ந்த குடிப்பிறப்பும், அரசினர் பாராட்டக்கூடிய நல்ல பண்பாடும் பெற்றிருப்பதே தூதருக்குரிய தகுதிகளாகும்.*

## உலகை விட்டு இன்னுமே நீங்காமல் அச்சுறுத்தும் கொவிட் தொற்று!

உலகம் கடந்த சில வருட காலமாக இடரின் மத்தியிலேயே நகர்ந்து கொண்டிருக்கின்றது. சீனாவில் முதன் முதலாக கொரோனா தொற்று தோற்றம் பெற்றதிலிருந்து உலகம் துயரிலும் துன்பத்திலுமே நகர்ந்து கொண்டிருக்கின்றது. கொரோனா தொற்று உலக நாடுகளில் உச்சத்தைத் தொட்டு, படிப்படியாக தணிவு நிலைமைக்குச் சென்றுள்ள போதிலும் அதன் பாதிப்புகள் இன்னுமே உலகை விட்டு நீங்கவில்லை.

கொவிட் தொற்று உலகை விட்டு முற்றாக நீங்கி விடுமென்றுதான் எல்லோரும் நம்பிக்கை கொண்டிருந்தனர். மக்கள் கடைப்பிடித்த சுகாதாரப் பழக்கவழக்கங்களும், தடுப்பூசியும் கொரோனாவை முற்றாக விரட்டியடித்து விடுமென்றுதான் உலகம் நம்பியது. அந்த நம்பிக்கைக்கேற்ப உலகின் அனைத்து நாடுகளிலும் கொவிட் தொற்று பெருவீழ்ச்சி நிலைக்கு வந்திருந்தது.

கொவிட் தொற்றை மனித இனம் வெற்றி கொண்டு விட்டதென்று நிம்மதிப் பெருமூச்சும் விட்டுக் கொள்ள முடிந்தது. ஆனால் அந்த நிம்மதி நீடிக்கவில்லை. உலகின் பல நாடுகளில் தற்போது மீண்டும் கொவிட் தொற்றானது வெவ்வேறு திரிபுகளில் அச்சுறுத்தத் தொடங்கியுள்ளது. பல மனித உயிர்களைப் பலியெடுத்தும் விட்டது. இலங்கையிலும் கொவிட் தொற்று காரணமாக சில உயிரிழப்புகள் சமீப நாட்களாக சம்பவித்துள்ளன.

கொவிட் தொற்றிலிருந்து உயிர்ப் பாதுகாப்புப் பெறுவதற்கு தடுப்பூசியானது சிறந்த பாதுகாப்பென்பதில் உண்மை இல்லாமலில்லை. அதாவது கொவிட் தொற்று ஏற்பட்ட ஒருவரில் அத்தொற்றின் வீரியத்தன்மை பெரிதும் குறைவாக இருக்குமென்பதே அதன் அர்த்தமாகும். கொவிட் தொற்றினால் ஏற்படுகின்ற உயிரிழப்பிலிருந்து அதிக பாதுகாப்பை தடுப்பூசி வழங்குமென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆனால் உலகிலிருந்து கொவிட் தொற்றை முற்றாக விரட்டியடிப்பதற்கு தடுப்பூசி உதவுமென்பது அதன் அர்த்தமல்ல. கொவிட் வைரஸானது வெவ்வேறு திரிபுகள் எடுத்து உலகை நீண்ட காலத்துக்கு அச்சுறுத்திக் கொண்டிருக்குமென்பதே உண்மையாகும். எனவே காலத்துக்குக் காலம் தடுப்பூசியை மக்கள் ஏற்றிக் கொண்டிருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும். அப்போதுதான் கொவிட் வைரசுக்கு எதிரான நோயெதிர்ப்புத் தன்மையை எம்மால் உடலில் கொண்டிருக்கக் கூடியதாக இருக்கும் என்பது மருத்துவ நிபுணர்களின் நம்பிக்கை ஆகும்.

இலங்கை மக்களில் பெரும்பாலானவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும், பூஸ்டர் தடுப்பூசியையும் இதுவரை பெற்றுக் கொண்டுள்ளனர். அவர்கள் இப்போது நான்காவது தடுப்பூசியை பெற்று வருகின்றனர். நான்காவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்குத் தவறக் கூடாதென மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். கொவிட் தொற்று மீண்டும் அச்சுறுத்தத் தொடங்கியுள்ளதனால் தடுப்பூசி பெறுவது கட்டாயமெனவும் அறிவுறுத்தப்படுகின்றது.

ஆனால் எமது நாட்டில் இதுவரை எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்களும் பலர் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் பலர் ஒரேயொரு தடுப்பூசியை மாத்திரம் பெற்றுக் கொண்டுள்ளனர். இரண்டு தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டு, பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்களும் பலர் உள்ளனர். கொவிட் தொற்றைப் பொறுத்தவரை இவையெல்லாம் அலட்சியப் போக்குகளாகும். தடுப்பூசியொன்றே கொவிட் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான சிறந்த ஆயுதமென்பதை மக்கள் மறந்து விடக் கூடாது.

நாட்டில் சில மரணங்கள் சம்பவித்துள்ளன. கொவிட் தொற்று மீண்டும் தலைகாட்டத் தொடங்கி விட்டது. எனவே சுகாதாரப் பழக்கவழக்கங்களும், முகக்கவசமும் மீண்டும் அவசியமென்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். இல்லையேல் மக்கள் மீண்டுமொரு ஆபத்துக்குள் பிரவேசிக்க வேண்டியேற்படுமென்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர். எமது நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் முகக்கவசத்தை முற்றாக மறந்து விட்ட நிலையில், இவ்வாறான எச்சரிக்கைகள் விடுக்கப்படுகின்றன.

இலங்கை மாத்திரமன்றி உலகின் பல நாடுகள் தற்போது முகக்கவசத்தை கட்டாயப்படுத்தி வருகின்றன. கொவிட் தொற்றில் இனிமேல் அலட்சியம் கூடாதென்பதே உலக மருத்துவ நிபுணர்களின் எச்சரிக்கையாகவும் உள்ளது. முகக்கவசம் இனிமேல் அவசியமில்லையென உலக நாடுகள் அவசரப்பட்டு அறிவித்தல் விடுத்துள்ளனவோ என்றே எண்ணத் தோன்றுகின்றது. முகக்கவசத்தை தொடர்ந்தும் கட்டாயத்தில் வைத்திருந்திருப்பின் கொவிட் ஆபத்து மீண்டும் தலைதூக்கியிருக்க வாய்ப்பில்லை என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இலங்கையிலும் முகக்கவசத்தை அவசரப்பட்டு நீக்கியிருக்கத் தேவையில்லை. தொடர்ந்தும் அதனைக் கடைப்பிடித்திருந்தால் தொற்று மீண்டும் தலைதூக்கியிருக்க வாய்ப்பில்லை என்ற கருத்தும் நிலவுகின்றது. எனவே இனிமேலாவது மக்கள் முகக்கவசம் அணிவதில் கவனம் செலுத்துவது அவசியமாகும். அது மாத்திரமன்றி கொவிட் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான முன்னெச்சரிக்கைப் பழக்கவழக்கங்களை கைவிடாமல் தொடருவதும் அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டும் இந்தியாவை வேதனைப்படுத்தும் சீன உளவுக்கப்பல் விவகாரம்!

அம்பாந்தோட்டை துறைமுகமானது வர்த்தக நடவடிக்கைகளுக்கு மட்டுமே சர்வதேச ரீதியில் பயன்படுத்தப்படுமென்று இந்தியாவுடன் அவ்வேளையில் இலங்கை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உடன்பட்டது. ஆனால் அந்த உடன்படிக்கை மீறப்படும் வகையில் இப்போது சீனாவின் உளவுக் கப்பல் ஒன்று அதே துறைமுகத்திற்கு வர இருக்கின்றது.

அதற்கு முன்பதாக இலங்கையின் சமீப கால நெருக்கடி குறித்தும், இலங்கைக்கு இந்தியா வழங்கி வருகின்ற உதவிகள் மற்றும் ஆதரவுகள் குறித்தும் இவ்விடத்தில் குறிப்பிடுவது முக்கியம். இலங்கைக்கு இந்தியா பல பில்லியன் ரூபா பெறுமதியான உதவிப் பொருட்களை நட்பு ரீதியாக வழங்கியுள்ளது. பெருந்தொகைக் கடன்தொகையையும் வழங்கியுள்ளது.

இலகுவான வட்டி வீதம் கொண்ட கடன்களை இந்தியா இலங்கைக்கு வழங்கியுள்ளது. இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த வேளையில் விரைந்து வந்து உதவி வழங்கிய நாடு இந்தியா ஆகும். எந்தவொரு நிபந்தனையின் பேரில் இல்லாத உதவிகளை இந்தியா வாரி வழங்கியுள்ளது.

இந்திய மத்தி அரசானது உணவு நிவாரணம், எரிபொருள், கடனுதவி, மருந்துகள் என்றெல்லாம் ஏராளமான உதவிகளை நெருக்கடி உதவிகளாக சமீப காலமாக இலங்கைக்கு வழங்கியுள்ளது. அதேசமயம் தமிழக அரசாங்கமும் இலங்கையில் அல்லலுறும் மக்களுக்கு தொடர்ந்து உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றது. அது தவிர தமிழ்நாட்டிலிருந்து தனிப்பட்ட முறையில் பலர் இலங்கைக்கு பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்காக உதவி வருகின்றார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் உறுதியான கொள்கையொன்று உள்ளது. 'அயல்தேசத்துக்கு முதலிடம்' என்பதே இந்தியாவின் கொள்கை ஆகும். இலங்கைக்கு துயர் நேருகின்ற அனைத்து வேளைகளிலும் இந்தியா இவ்வாறு விரைந்தோடி வந்து உதவிக் கரம் நீட்டியுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் ஆசிய நாடுகளிலேயே இலங்கைக்கு முன்னுரிமை அளித்து இந்தியா உதவி செய்து வருகின்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் உதவுவதென்பதில் இந்திய பாராளுமன்றத்தில் கூட மாறுபட்ட நிலைப்பாடு கிடையாது. இலங்கைக்கு உதவ வேண்டும் என்பதில் அனைவரும் ஒரே கருத்தையே கொண்டுள்ளனர். அவ்வாறு இலங்கையை உற்ற நண்பனாக இந்தியா நோக்கும் போது, இன்றைய நிலைவரமானது இந்தியாவுக்கு கவலை அளிப்பது தவிர்க்க முடியாததாகும். தனக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழியை இலங்கை மீறுவதாகவே இந்திய இராஜதந்திரிகள் கவலை கொள்கின்றனர். சீனாவின் உளவுக்கப்பல் அம்பாந்தோட்டைக்கு வருகை தருவது இந்தியாவிற்கு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளதென்பது இந்திய அரசாங்க வட்டாரங்களில் வெளியாகின்ற தகவல்களிலிருந்து புலனாகின்றது.

**'அயல்நாட்டுக்கே முதலிடம்' என்ற உறுதியான கொள்கையின் கீழ் இலங்கைக்கு இந்தியா வழங்கி வருகின்ற உதவிகள், ஆதரவுகள் ஏராளம். இந்நிலையில் சீனக்கப்பலின் இலங்கை வருகையானது இந்தியாவுக்கு மகிழ்ச்சி தரப் போவதில்லை!**



இலங்கைக்கு இன்று நேற்று அன்றி பன்னெடுங்காலமாக இந்தியா உதவி வழங்கி வருகின்றது. அத்துடன் இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதிலும் இந்தியாவின் பங்களிப்பு இருந்துள்ளதென்பது தெரிந்த விடயமாகும். இவ்வாறான பின்னணிகளை வைத்துப் பார்க்கின்ற போது சீனக் கப்பலின் வருகையானது இந்தியாவுக்கு மகிழ்ச்சியளிக்கப் போவதில்லையென்பது திண்ணம்.

சீனா ஏற்கனவே திட்டமிட்டபடி தனது உளவுக் கப்பலை இலங்கைக்கு அனுப்புமானால், எதிர்காலத்தில் இந்தியாவின் பாரிய உதவிகளை இலங்கை இழக்க நேரிடும் என்பது பொருளாதார நிபுணர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் கருத்தாக உள்ளது.

நிலைமை இவ்வாறிருக்கையில் இலங்கையில் உள்ள பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சிகளும் சிறுபான்மை அரசியல் கட்சிகளும் கூட சீனாவின் கப்பல் விவகாரத்தை கவலையுடனேயே நோக்குகின்றனர். 'இந்தியாவை பகைக்கக் கூடாது' என்று தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் பலரும் குரல் கொடுத்து வருகிறார்கள். எரிபொருள் தேவை மற்றும் சிறு பராமரிப்பு வேலைகளை முடித்துக் கொண்டு பயணத்தை தொடரும் நோக்குடன் இந்தக் கப்பல் வருவதாக இலங்கை தெரிவித்தாலும், அதனை ஏற்றுக் கொள்வதற்கு பலரும் தயாராக இல்லை.

இன்றைய வேளையில் இதற்கான அவசரம் என்ன என்பதே சர்வதேச நோக்கர்களின் வினாவாகும். சீனாவின் உளவுக் கப்பலான 'யுவான்வாங் 5' ஹம்பாந்தோட்டைதுறைமுகத்தில் எதிர்வரும் 11 முதல் 17 வரை தரித்து நிற்கும் என இலங்கை உறுதி செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியப் பெருங்கடலை சீனா தனது ஆதிக்கத்திற்கு உட்படுத்தி வருவதாக இந்தியா மற்றும் அமெரிக்கா குற்றம் சாட்டி வரும் நிலையில் இந்தக் கப்பல் விவகாரம் பிராந்தியத்தில் புதிய சர்ச்சையை உருவாக்கியிருக்கிறது.

2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு சீனக் கடற்படைக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வருவது இதுவே முதல்முறையாகும். 2014 ஆம்ஆண்டு, சீன நீர்மூழ்கிக் கப்பலொன்று கொழும்பில் தரித்து நின்றது. அவ்வேளை, இந்தியா தனது கடுமையான கோபத்தையும், அதிருப்தியையும் வெளியிட்டமை ஞாபகமிருக்கலாம். அதேபோல, 2021ஆம் ஆண்டு எவ்வித அனுமதியும் பெறாமல் யுரேனியம் ஏற்றிக் கொண்டு வந்த ஒரு சீனக்கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்து பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

2014 ஆம்ஆண்டு இலங்கைக்கு வந்த நீர்மூழ்கிக் கப்பலை விட 'யுவாங்வேங் 5' என்ற கப்பல் மிகவும் சக்தி வாய்ந்த தொழில்நுட்பம் கொண்டது என்றும் தென்னிந்தியாவின் துறைமுகங்களிலுள்ள தகவல்களை இலகுவாக கைப்பற்றக் கூடிய திறனை இந்தக் கப்பல் பெற்றிருக்கிறது எனவும் 'எக்கொனொமிக் டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

மியன்மார் முதல் கிழக்கு ஆபிரிக்க நாடுகள் வரையிலான சீன உள்கட்டமைப்பு திட்டங்களின் 'இரட்டை' பயன்பாடுகள் குறித்து இந்தியா நீண்ட காலமாக கேள்வி எழுப்பி வந்திருக்கிறது. சீனாவின் இத்தகைய நகர்வுகள் இந்தியாவின் நலன்களுக்கு நேரடி சவாலாக அமையும் என்று இந்தியா தொடர்ந்தும் நம்பி வருகிறது.



# பல்துறை கலைஞராக திகழும் ஊடகவியலாளர் சத்தார்

பல கலைகள் தெரிந்த பத்திரிகையாளராக ஏ.எல்.எம். சத்தார் (சபீக்) திகழ்கிறார். ஊடகத்துறை, சிறுகதை, சிறுவர் நாவல், துப்பறியும் நாவல், கவிதை, புகைப்படத் துறை, கட்டடக்கலை, தச்சுத் தொழில், கைப்பணி என்று சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட கலைகளுக்கு சொந்தக்காரனாக பிரகாசிக்கும் இவரால் இன்று கலையுலகம் பெருமை கொள்கிறது.

இவர் இரத்தினபுரி அப்துல் லத்தீப்_ பாணந்துறை ஹாஜியானி சித்தி பாத்திமா தம்பதியின் மூன்றாவது புதல்வனாக 1951 பெப்ரவரி 14ஆம் திகதி பாணந்துறை, ஹேனமுல்லையில் பிறந்தார். ஜீலான் தேசிய பாடசாலையாக விளங்கும் ஹேனமுல்லை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 1956 இல் இணைந்து, கீழ்ப்பிரிவு வகுப்பில் கல்வியைத் தொடர்ந்தார். அன்று ஜீலானியில் உயர்தர வகுப்பு இல்லாததால் வெளியூர் பாடசாலைக்குச் சென்று கற்பதில் வசதிக் குறைவால் மேற்படிப்பைத் தொடர்வதில் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்கினர்.

1976 ஆம் ஆண்டில் கொழும்பு மருதானையில் உள்ள சமூக நிறுவனம் ஒன்றில் (ஜமா அதே இஸ்ஸாமி) வேலைக்கமர்ந்தார். அங்கு வெளியிடப்படும் அல்ஹஸனாத் பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருந்து பத்திரிகைத்துறை பயணத்தை ஆரம்பித்தார். அதன் போது ஏ.எல். படிக்கும் தனது சகோதரனின் பாடக்குறிப்புக் கொப்பிகளை எடுத்துச் சென்று வாசிப்பதன் மூலம் சுயமாகப் படித்து ஏ.எல். பரீட்சை எழுதி அதில் சித்தியடைந்தார்.

பின்னர் உதயம், எழுச்சிக் குரல், தினபதி, சிந்தாமணி ஆகிய பத்திரிகை நிறுவனங்களிலும் இணைந்து பணியாற்றியுள்ளார். 1987ஆம் ஆண்டு கூலித் தொழிலாளியாக மத்திய கிழக்குக்குப் பயணமானார். தனக்கிருக்கும் பத்திரிகை தாகம் காரணமாக அங்கு அரபு மண்ணில் இருந்து வெளிவரும் 'முதலாவது தமிழ் மாத இதழ்' என்ற சுலோகத்தோடு 'அல் அஸ்லம்' கையெழுத்து மாதப் பத்திரிகையை சுமார் இரண்டரை வருடங்கள் தொடராக வெளியிட்டார். அங்கிருந்து 1994 இல் நாடு திரும்பிய பின்னர் தினகரன் செய்தியாளராக பணியாற்றினார். பின்னர் 1997 இல் நவமணி பத்திரிகையில் இணைந்து, செய்தி ஆசிரியர், விவரண ஆசிரியர் ஆகிய பதவிகளை வகித்தார். கருத்துக்களம், சிறுகதை, கவிதைப் பகுதி, மருத்துவப் பகுதி, நகைச்சுவை உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் பொறுப்பாளராக இருந்து பணியாற்றினார்.



அதன் மூலம் இளம் எழுத்தாளர்கள் உருவாகவும் வளரும் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கவும் பரந்த மனதுடன் செயற்பட்டார். பத்திரிகை உலகில் அல் அஸ்லம், பரியாரி, ஈழ மித்திரன், ஞானியார், சபீரா, சபீக் உள்ளிட்ட புனைப் பெயர்களிலேயே ஆக்கங்கள் எழுதியுள்ளார்.

2015ஆம் ஆண்டு 'செரண்டிப்' தினசரி வெளிவந்த போது அதன் உதவியாசிரியராகவும் பணியாற்றியுள்ளார். 2016ஆம் ஆண்டு விடிவெள்ளி பத்திரிகையில் இணைந்து உதவி ஆசிரியராகப் பணியைத் தொடர்ந்தார்.



சமுதாயம் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள், சிறுகதைகள், சமூகத்திற்குத் தேவையான சிங்கள ஆக்கங்களின் மொழிபெயர்ப்புகள் போன்ற விடயதானங்களை எழுதி வாசகர்களின் நன்மதிப்புக்குரியவராக விளங்கினார். இவரால் எழுதப்பட்ட சிறுவர் நாவல்கள், உருவகக்கதைகள், அறிவியல் ஆக்கங்கள் பலவும் அச்சு வாகனம் ஏறக் காத்திருப்பதாக இவர் கூறுகிறார். தினகரன், அல்ஹஸனாத், எழுச்சிக் குரல், தினபதி சிந்தாமணி, நவமணி, விடிவெள்ளி உள்ளிட்ட பத்திரிகைகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இவரது பலதரப்பட்ட ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

பாணந்துறை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் 2003ஆம் ஆண்டு இவருக்கு 'சொல்லின் செல்வன்' பட்டமும் இஸ்லாமிய பேரவை இலக்கிய வட்டம் 2018ஆம் ஆண்டு 'ஊடகத்தாரை' பட்டமும் வழங்கி இவரை கௌரவித்தன. 2012 ஆம் ஆண்டு பேருவளை தினகரன் வாரமஞ்சரி வாசகர் வட்டம் இவரது ஊடக பணிகளைப் பாராட்டி விருது வழங்கி கௌரவித்துள்ளது. அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் 2003ஆம் ஆண்டு 'சாமஶ்ரீ சேவைச் செம்மல்' பட்டம் பட்டமும் மலையக கலைஞர் முன்னணியால் 2002ஆம் ஆண்டு 'இரத்தின தீபம்' விருதும் இலங்கை கலைஞர் முன்னணியால் 2005 ஆம் ஆண்டு 'எழுத்தியல் நாயகன்' பட்டமும் வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பேருவளை **பீ.எம்.முக்தார்...**

# தெஹிவளை எஸ்.டி.எஸ். ஜயசிங்க மத்திய கல்லூரி மாணவர் குடும்பங்களுக்கு லங்கா IOC, ICF உதவி

அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் பொருளாதாரச் சரிவு ஆகியவற்றால் நாடு சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், LIOC மற்றும் இந்திய CEO மன்றம் இணைந்து பல CSR நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகின்றன. LIOC மற்றும் ICF என்பன தெஹிவளை எஸ். டி. எஸ். ஜயசிங்க மத்திய கல்லூரி மாணவர்களின் ஆதரவற்ற குடும்பங்களுக்கு ரூ. 2 மில்லியன் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளன.

LIOC மற்றும் ICF ஆகியவற்றின் இந்த முன்முயற்சி பாடசாலை நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தச் சவாலான நேரத்தில் உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கு ஆதரவளிக்க முன்வந்தமை உள்ளூர் சமூகத்தால் பாராட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பேசிய LIOC முகாமைத்துவப் பணிப்பாளர் மனோஜ் குப்தா, 'LIOC எப்பொழுதும் நல்ல நோக்கத்துக்காக பங்களிக்க முயற்சிக்கிறது. எங்களின் தற்போதைய முயற்சிகள் பொருளாதார சவால்களுக்கு எதிராக போராடுவதற்கும், உணவுப் பொருட்களின் தற்போதைய பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் பங்களிப்பது எப்போதும் நோக்கமாக உள்ளது. இதன் மூலம் வசதி குறைந்த மாணவர்களின் கல்வியை தடையின்றி தொடர வழி வகுக்கின்றது' என்றார்.

விழாவில் LIOC நிர்வாக இயக்குநர் மனோஜ் குப்தா, அதிபர் ஜகத் இடமேகம், துணை அதிபர் திருமதி சபிதா குணதிலக, இந்திய CEO மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய உமேஷ் கௌதம், அசோக் லேலண்ட் பிரதம நிறைவேற்றதிகாரி மற்றும் கிஷோர் ரெட்டி பிளாட்டினம் ரியாலிட்டி இன்வெஸ்ட்மெண்ட்ஸ் வன் ஹொஸ் பிற்றாலிற்றி PTPL (இலங்கை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த வாய்ப்பை வழங்கியதற்காக பாடசாலை நிர்வாகத்திற்கு LIOC மற்றும் ICF நன்றியை தெரிவித்ததுடன், அத்தகைய உதவியை தொடர்வதாகவும் அவர்களுக்கு உறுதியளித்தது.





# கிழக்கின் குரல்



## விவசாய கிணற்றுக்குள் விழுந்த யானைக்குட்டி அதிகாரிகளால் மீட்பு

(கந்தளாய் தினகரன் நிருபர்)

கந்தளாய் சூரியபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூரியபுர விவசாயப் பகுதியில், காட்டு யானையொன்று கைவிடப்பட்ட விவசாயக் கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளது .

பன்னிரண்டு வயதுடைய யானைக் குட்டியே இவ்வாறு விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இச் சம்பவம் (01) திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது.

விவசாயக்கிணற்றில் தவறி விழுந்த காட்டு யானையை மீட்க கந்தளாய் வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சுன்னக்காடு பகுதியிலிருந்து உணவுதேடி சூரியபுர கிராமத்திற்கு வந்த இந்த யானைக்குட்டி மீண்டும் வனப் பகுதிக்குள் சென்று கொண்டிருக்கையிலே, கிணற்றில் விழுந்ததாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூரியபுர பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினர் கிராம மக்களுடன் இணைந்து, யானையை வெளியே எடுத்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட இந்த யானைக்குட்டி சுன்னக்காட்டுப் பகுதிக்கு மீண்டும் துரத்தப்பட்டது.

## வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் விசேட திட்டம் அமுல்

(கிண்ணியா தினகரன் நிருபர்)



வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்த்துள்ள சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம்பெறும் குடும்பங்களைச்சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கான விஷேட வழிகாட்டல் கருத்தரங்கு கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (02) நடைபெற்றது.

சமுர்த்தி திணைக்களம் மற்றும் வெளிநாட்டு பணியகம் என்பன இணைந்து கிண்ணியா மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு இக்கருத்தரங்கை நடாத்தியது.

நாட்டின் பொருளாதாரம் திடீரென வீழ்ச்சியுற்றதால், சாதாரண மக்களின் வாழ்வு பெரும் சவாலுக்கு உள்ளாகியுள்ளது. இந்நிலை யில்,பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்வோரின் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இக்குடும்பங்களிலிருந்து தகுதியானோரை வெளிநாடுகளுக்கு அனுப்பும் நோக்குடனே இக்கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.எம். கனி கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும், திருகோணமலை மாவட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு காரியாலய உத்தியோகத்தர், கிண்ணியா சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர், கிண்ணியா பிரதேச செயலக வெளிநாட்டு வேலை வாய்ப்பு உத்தியோகத்தர், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் கிண்ணியா, தம்பலகாமம் பிரதேசத்தை சேர்ந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு செல்ல எதிர்பார்த்துள்ள இளைஞர் யுவதிகளும் கலந்து கொண்டனர்.

## மாணவர் சத்துணவின் விலை அதிகரிப்பு

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

மாணவருக்கு வழங்கப்பட்டு வந்த போஷாக்கு உணவு, அறுபது ரூபாவாக விலை உயர்ந்துள்ளது. இதற்கு முன்னர் இது, முப்பது ரூபாவுக்கு விற்கப்பட்டது.

சிறந்த போஷாக்குணவை மாணவருக்கு வழங்கும் பொருட்டு,நாளாந்தம் இச்சத்துணவு வழங்கப்படுகிறது. இவ்விலை உயர்த்தப்பட்ட விடயம் தொடர்பாக கல்வி அமைச்சு சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், மாணவர்களுக்கு முறையான சத்துணவு கிடைக்காததை கருத்தில்கொண்டே ஆகஸ்ட் மாதம்தொடக்கம் இதன் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

## சுவர் இடிந்து விழுந்து சிறுமி மரணம்; விளையாடியபோது பரிதாபச் சம்பவம்



(கல்குடா தினகரன் நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புணானை பொத்தனை பகுதியில் வீட்டின் சுவர் விழுந்ததில் சிறுமியொருவர் உயிரிழந்தார். இப்பரிதாபச் சம்பவம் நேற்று (03) புதன்கிழமை இடம்பெற்றதாக,

வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீள்குடியேற்றக் கிராமமான புணானை பொத்தனையைச் சேர்ந்த, உசனார் பாத்திமா நீமா என்ற மூன்றரை வயது சிறுமியே, வீட்டின் சுவர் விழுந்ததில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சிறுமியின் வீட்டிற்கு அருகில் வீடு உடைக்கப்பட்டு ஒரு பக்கம் சுவர் மாத்திரம் காணப்பட்டது. இந்நிலையில் சீமெந்துச் சுவர் ஓரத்திலிருந்து மூன்று சிறுமிகள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

திடீரென காற்று பலமாக வீசியதில், சுவர் தீடீரென சரிந்து விழுந்தது. இதன்போதே சிறுமி உயிழந்தார். மற்றைய இருவரும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

உயிரிழந்த மூன்றரை வயது சிறுமியின் ஜனாஸா வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காத்தான்குடி பள்ளிவாசல்களில் ஷுஹதாக்கள் தின நிகழ்வுகள்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி பள்ளிவாசல்களில் படுகொலை செய்யப்பட்டோரின் 32ஆவது ஷுஹதாக்கள் தினம் நேற்று (03 புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்ஆப்பள்ளிவாசல், காத்தான்குடி முதலாம் குறிச்சி ஹுஸைனிய்யா பள்ளிவாசல் ஆகியவற்றில், 3.08.1990 அன்று புனித இஷாத் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல நடாத்தினர். இச்சம்பவத்தில் 103 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இதில், ஷஹீதாக்கப்பட்டவர்களை நினைவு கூர்ந்து, வருடாந்தம் ஷுஹதாக்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.



இந்த வகையில், நேற்று நடந்த ஷுஹதாக்கள் தின நிகழ்வுகள் படுகொலை இடம்பெற்ற காத்தான்குடி முதலாம் குறிச்சி ஹுஸைனிய்யா பள்ளிவாசலில் இடம் பெற்றது.

பள்ளிவாசலின் தலைவர் எம். சமீம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில், உலமாக்கள் பள்ளிவாசல் நிருவாகிகள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, அல்குர்ஆன் ஓதப்பட்டதுடன் விஷேட பிராத்தனையை காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப்பள்ளிவாசல், இமாம் மௌலவி ஏ.ஜே.அமீன் நடாத்தினார். ரைஸ் சிறீலங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்ஹ் ஏ.பி.அக்ரம் நழீமி சிறப்புரையாற்றினார்.

இதே போன்று மற்றுமொரு நிகழ்வு காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்ஆப்பள்ளிவாசலிலும் நடைபெற்றது.

## திருச்சடங்கு கதவு திறத்தல் நிகழ்வு



(பாசிக்குடா நிருபர்)

வந்தாறுமூலை கிழக்கு களுவன்கேணி அருள்மிகு ஸ்ரீ சிவமுத்து மாரியம்மன் ஆலயத்தின் திருச்சடங்கு கதவு திறத்தல் நிகழ்வு, செவ்வாய்க்கிழமை மாலை வெகு சிறப்பாக நடைபெற்றது.

வந்தாறுமூலை தேவபுரம் நாகதம்பிரான் ஆலயத்தில் இருந்து மடை எடுக்கின்ற நிகழ்வு ஆரம்பமாகி, இரவு ஏழு மணியளவில் திருக்கதவு திறத்தல் நிகழ்வு இனிதே நடைபெற்றது.

தொடர்ந்து ஏழு நாட்கள் திருச்சடங்கு நடைபெற்று எதிர்வரும் (08) திங்கட்கிழமை தீ மிதிப்பு நிகழ்வுடன் திருச்சடங்கு இனிதே நிறைவு பெறவுள்ளது. ஐந்தாம் திகதியன்று பாற்குடபவனியும் விஷேட பால் அபிஷேகப் பூஜையும் இடம்பெறும்.

ஆலயத்தலைவர் க.மகாலிங்கம் தலைமையில், பிரதமகுரு பூ.சண்முகத்தின் வழிகாட்டலில் திருச்சடங்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


கடற்றொழில் அமைச்சு

இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)

**கிளிநொச்சி, புதுமுரிப்பு சமூக பங்கேற்பு மீன் உற்பத்தி பிரிவு அரச, தனியார் கூட்டு முயற்சியின் கீழ் செயல்படுத்தும் நோக்கத்தின் ஆர்வ வெளிப்பாடு.**

இத்திட்டத்திற்கான ஆர்வமுள்ளவர்களால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுடன் விண்ணப்பங்கள், **தலைவர், இலங்கை தேசிய நீர்உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை, இல.41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு 2022.08.24 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு அல்லது **அதற்கு முன்னர்** கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

மேலதிக தகவல்களை (**www.naqda.gov.lk**) மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு,
பணிப்பாளர் (விரிவாக்கம்)
தொலைபேசி :- +94 11-2786579/+9411-2786497/+9471-4468201
தொலைநகல் :- +9411- 2786579 / +9411-2786493
மின்னஞ்சல் :- directorext @naqda.gov.lk

தலைவர்,
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
**2022.08.04.**


## சந்திரகாந்தன் எம்பியின் தகப்பனார் காலமானார்

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனின் தந்தையும்,தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் ஆயுட்கால உறுப்பினருமான ஆ.சிவநேசதுரை நேற்று (03) காலமானார்.

கோரளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான இவர், தனது 75 ஆவது வயதில்) காலமானார்.

மட்டக்களப்பு பேத்தாழையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் ஏழு பிள்ளைகளின் தந்தையாவார். கிழக்கின் முதலாவது முதலமைச்சராக இவரது மகன் பதவி வகித்திருந்தார்.

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கு பக்க பலமாக இருந்து கட்சியை கட்டுக்கோப்புடன் உருவாக்கி வளர்தெடுத்த பங்கும் இவருக்குண்டு. தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி சார்பாக கோரளைப்பற்று பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்து 2008 ஆம் ஆண்டு முதல் 2012 வரையும் இவர், பிரதேச சபை உறுப்பினராக இருந்து பல மக்கள் நலன்சார்ந்த வேலைகளை முன்னெடுத்தவர்.

## கௌரவ தீர்வு கோரி நூறுநாள் செயலமர்வு

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)



“வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்” எனும் 100 நாட்கள் செயல்முனைவின் மூன்றாம் நாள் போராட்டம் நேற்று (03) புதன்கிழமை திருகோணமலை மாவட்டத்தில், ஆனந்தபுரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுள்ளது.

இப்போராட்டத்தில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், செயற்பாட்டாளர்களென 150 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனக்கோரி நடைபவனியாக வருகைதந்த இவர்கள், மைதானத்தில் கூடியிருந்து தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர். அத்துடன் அடுத்தகட்ட போராட்டமானது முல்லைத்தீவு மாவட்டத்தில் கரத்துரைப்பற்றில் நாளை (04) வியாழக் கிழமை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது.


இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

விலக்களித்தலுக்கான உத்தேசம் - மொனாச் ரெசிடன்ஸ்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) பிரிவிற்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது இத்தால் அறியச் செய்வது யாதெனில், சக்தி விநியோக அளவுக் குறைவு மற்றும் அவற்றின் வளாகங்களுள் ஓர் எல்லைக்குட்பட்ட விநியோக வலையமைப்பு காணப்படுதல் ஆகியவற்றால், குறித்துரைக்கப்பட்ட/ முறையான வளாகங்களில் மட்டும் மின்சாரத்தை விநியோகித்தல் மற்றும் வழங்கல் ஆகிய நோக்கங்களிற்காக, ஆணைக்குழு கீழ்வரும் அடையாளங்காணப்பட்ட விண்ணப்பதாரருக்கு விலக்களிக்க உத்தேசித்து உள்ளது என்பதாகும்.

| விண்ணப்ப இல | விண்ணப்பதாரர் | வளாகங்கள் | நுகர்வோரின் இயல்பு |
|---|---|---|---|
| E/AE-D/22/05 | கூட்டு ஆதன முகாமைத்துவ திட்ட இல: 6562 மொனாச் ரெசிடன்ஸ் | இல: 89, காலி வீதி, கொழும்பு 03 | குடியிருப்பு |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்ப இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

திகதி: 2022.08.04


## அரசியல் தலைமைகளை வழிநடத்தும் பொறுப்புக்கள் கவிஞர்களிடமும் உண்டு



நாட்டு மக்களின் பொருளாதார மேம்பாடு, வாழ்வாதார எழுச்சியைக் கருத்திற்கொண்டு சகல முஸ்லிம் அரசியல் தலைமைகளும் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கும் முயற்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என, பட்டியடிப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்க உப தலைவரும், கவிஞருமான கால்தீன் தெரிவித்தார். அம்பாரை மாவட்ட சிறந்த கவிஞர்களுள் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்ட கால்தீன் அரசாங்க அதிபரால் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் கருத்து தெரிவிக்கையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.இங்கு பேசிய அவர். கவிஞர்கள் காலத்தின் கண்ணாடி என்பர். மொழி ஆற்றலால் சமூகத்தை வழிநடத்தும் பொறுப்பும் இவர்களுக்கு உள்ளது. எனவே, எமது அரசியல் தலைமைகளையும் வழிகாட்டும் பொறுப்பு எமக்கு உள்ளதாகவே நான், கருதுகிறேன். இந்தப்பொறுப்புக்களை பிரதிபலிக்கும் வகையில், கவிஞர்களின் படைப்புக்கள் இருக்க வேண்டும்.

இந்தப் பொறுப்புடன்தான், இவ்வாறான கோரிக்கையை முன்வைக்கிறேன்.நமது நாடு இன்று சென்று கொண்டிருக்கும் நிலையிலிருந்து மீண்டெழ, ஒத்துழைப்பு அரசியலே அவசியம். எனவே குறுகிய ஆதாயங்களை அப்புறப்படுத்திவிட்டு, அமைக்கப்படவுள்ள சர்வகட்சி அரசாங்கத்துக்கு முஸ்லிம் தலைமைகள் முன்வர வேண்டும் என்று, கவிஞர் கால்தீன் தெரிவித்தார்.

# யாழில் மீண்டும் தலைதூக்கும் கொரோனா வைரஸ்

## கடந்த மாதம் இருவர் பலி

யாழ். விசேட நிருபர்



யாழில் கடந்த மாதம் இருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று பரவல் குறித்தும் அதனை தடுப்பது குறித்தும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையிலேயே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கொரோனா தொற்று தற்போது இலங்கை முழுவதும் பரவி வருகின்றது. அந்த வகையில் யாழ் மாவட்டத்திலும் கொரோனா தொற்றாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் இரண்டு கொரோனா மரணங்களும் யூலை மாதத்தில் நிகழ்ந்துள்ளன. எனவே, இந்நிலைமையானது கொரோனா பெருந்தொற்றாக மாறுவதற்குரிய ஆபத்து நிலைமை காணப்படுகின்றது.

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படின் முன்பு போன்றே கொரோனா இறப்புக்கள் பெருமளவு ஏற்படும். இந்நிலையில் எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எமக்கு முன்னால் உள்ள தெரிவுகள் மிகச்சிலவே.

மக்கள் அதிகளவு கூடும் இடங்களில் பொதுச் சுகாதார நடைமுறைகளான முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல், சரியான முறையில் கைகளைக் கழுவுதல் என்பவற்றைக் கடைப்பிடித்தல்.

தடுப்பூசியை 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பெற்றுக் கொடுத்தல். தடுப்பூசியினை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களும் மற்றும் மூன்றாவது அல்லது நான்காவது தடவை பெற்றுக்கொள்ளாதவர்களும் உடனடியாக அதனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

முக்கியமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களும் வேறு நீண்டகால நோய் நிலைமைகளினால் பாதிக்கப்பட்டவர்களும் தமது நான்கு தடுப்பூசிகளையும் பெற்றிருப்பதை உறுதி செய்தல் வேண்டும். தடுப்பூசிகள் வழங்கப்படும் நிலையங்கள் மற்றும் திகதிகள் தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கு அழைப்பதன் மூலம் மக்கள் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், வடமாகாணத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் திங்கள், புதன் கிழமையும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் செவ்வாய், வெள்ளியும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் செவ்வாய், வியாழனும் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் செவ்வாயும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் செவ்வாய், புதனும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் செவ்வாய், வியாழனும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் புதன், சனியும் வவுனிய மாவட்ட பொது வைத்தியசாலை திங்கள்,செவ்வாய், புதனும் கொரோனா தடுப்பூசி வழங்கப்படும். பொதுமக்கள் மூன்றாவது மற்றும் நான்காவது தடவை தடுப்பூசியினை பெற்றுக் கொள்வதற்கு செல்லும்போது முதலில் தடுப்பூசி பெற்றுக் கொண்டமையினை உறுதிப்படுத்துவதற்காக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் வழங்கப்பட்ட அட்டையினை எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, மக்கள் அனைவரையும் அச்சமின்றி தமக்கென அறிவிக்கப்பட்ட நாட்களில் உரிய இடத்திற்கு சென்று தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கொரோனா தொற்றுநோய்க்கெதிராக தடுப்பூசியைக் பெற்றுக் கொள்வது உங்களையும் உங்களுக்கு பிரியமானவர்களையும் கொரோனா தொற்றுநோயிலிருந்து பாதுகாப்பதுடன் எமது சமூகத்தையும் பாதுகாப்பதாக அமையும் என அவர் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் மரக் கடத்தல் சம்பவங்கள்

முல்லைத்தீவு குறுப் நிருபர்

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் வீதியில் தேக்கு மரக்குற்றிகளை ஏற்றி சென்றவர்களை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். நேற்று முன்தினம் 01.08.2022 இரவு மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில் 9ஆம் கட்டைக்கும் கற்குவாரிக்கு இடைப்பட்ட பகுதியில் தேக்கு மரக்குற்றிகளை மறைத்து எடுத்து சென்ற வாகனத்தினை பணியில் இருந்த இராணுவத்தினர் மறித்து சோதனை செய்தபோதே இவர்கள் கையும் களவுமாக கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வாகனத்தில் தேக்கு மரக்குற்றிகள் இருப்பதை கண்ட இராணுவத்தினர் வனவளத்திணைக்களத்திற்கு தகவல் வழங்கி வனவளத் திணைக்கள அதிகாரிகளிடம் தேக்கு மரக்குற்றிகளை ஏற்றி சென்ற நபர்களையும் வாகனத்தினையும் ஒப்படைத்தனர். முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தேக்குமர காடுகள் அழிக்கப்பட்டு மரக்குற்றிகள் களவாக எடுத்துச் செல்லப்படும் சம்பவங்கள் கடந்த பல மாதங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. துணுக்காய், ஒட்டுசுட்டான், கரைதுறைபற்று, மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள தேக்குமர காடுகளில் இருந்தே களவாக மரங்கள் வெட்டப்படுவதாக பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலாளருக்கு கிராம அலுவலர்கள் ஊடாக தகவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இரவு வேளைகளில் மரக்கடத்தல்கள் தொடர்பாக பொது அமைப்புகள் பொலிஸாருக்கு தகவல் வழங்க வேண்டுமென சிவில் பாதுகாப்புக் கூட்டங்களில் பொலிஸார் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற போதிலும் மரக்கடத்தல்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்கின்றன.

## வவுனியா– ஆச்சிபுரம் இளைஞர் படுகொலை சம்பவம்: 7 பேர் கைது

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, ஆச்சிபுரம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஆச்சிபுரம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ரஞ்சா என அழைக்கப்படும் ஜோன்சன் என்ற 30 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவர் இடியன் துப்பாக்கியால் சுடப்பட்டும், வாளால் வெட்டப்பட்டும் படுகொலை செய்யப்பட்டிருந்தார். அந்த நபரின் கை வெட்டி எடுத்துச் செல்லப்பட்டு பிறிதொரு இடத்தில் வீசப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் சிதம்பரபுரம் பொலிஸாருடன் இணைந்து வவுனியா பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட இடியன் துப்பாக்கி சிதம்பரபுரம் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து வவுனியா பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் 4 வாள்கள், இரத்தம் தோய்ந்த ஆடைகள் என்பன மீட்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபரில் ஒருவர் காயம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதுடன் ஏனைய 6 பேரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## படகு கவிழ்ந்தமையால் பருத்தித்துறை மீனவர்கள் தமிழகத்தில் தஞ்சம்

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியிலிருந்து மீன்பிடிக்க சென்ற இரண்டு மீனவர்கள் தமிழகத்தில் கரை சேர்ந்துள்ளனர். பருத்தித்துறை இன்ப சிட்டி பகுதியை சேர்ந்த ஜனார்த்தனன் மற்றும் பலாலியை சேர்ந்த ஜெசிகரன் ஆகிய இருவரே கரையொதுங்கியுள்ளனர். விசாரணைகளின் போது , தாம் கடந்த 31ஆம் திகதி மாலை பருத்தித்துறை பகுதியில் இருந்து மீன்பிடிக்க புறப்பட்டதாகவும், தமது படகு, கடல் சீற்றம் காரணமாக கவிழ்ந்ததால் தாம் இருவரும் நீந்தி தமிழக கரையோரத்தை அடைந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இருவர் தொடர்பிலும் தமிழக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இவ்விசாரணைகளில் இருவரும் கள்ளப் படகில் கரைக்கு வந்திருக்கலாம் என தமிழக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இவர்கள் வருகையின் நோக்கம் குறித்து வேதாரண்யம் கடலோரக் பொலிஸ் நிலையத்தில் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

## புனித அந்தோனியார் திருச்சொரூபங்கள் இனம்தெரியாத நபர்களால் சேதம்

மன்னார் குறுப் நிருபர்)

முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்ட கஜிவத்தை பகுதியில் பல வருடங்களாக காணப்பட்ட புனித அந்தோனியார் சிற்றாலயத்தின் புனித அந்தோனியார் திருச்சொரூபங்கள் இரண்டு இனம்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டுள்ளன. இதனால் கொக்குப்படையான் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொக்குப்படையான் கிராம மக்கள் கஜிவத்தை பகுதியில் பல வருடங்களாக காணப்பட்ட புனித அந்தோனியார் சிற்றாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (2) மாலை ஆராதனைகளை மேற்கொள்ள சென்றிருந்தனர்.

இதன் போது சிற்றாலயத்தில் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1 மற்றும் 3 அடி உயரம் கொண்ட அந்தோனியார் திருச்சொரூபம் உடைக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து உடனடியாக சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக கொக்குப்படையான் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

## பன்மூர் குளத்தில் வீழ்ந்த இளைஞன் சடலமாக மீட்பு



நோட்டன் பிரிட்ஜ்

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்மூர் குளத்தில் வீழ்ந்த இளைஞன் ஒருவன் நேற்று 03.08.2022 முற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எபோட்சிலி மொன்டிபெயார் தோட்டத்தைச் சேர்ந்த 22 வயதுடைய மைக்கல் பவன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கண்டியிலிருந்து வரவழைக்கப்பட்ட சுழியோடிகள் மூலம் மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்படவுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 01.08.2022 இரவு எட்டு மணியளவில் ஹற்றன் நகரிலிருந்து இரண்டு நண்பர்களுடன் இளைஞன் மென்டிபெயார் தோட்டத்திலுள்ள தனது வீட்டிற்கு நடந்து சென்றபோதே வீதியோரத்திலுள்ள குளத்தில் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்துடன் சந்தேகத்தின் பேரில் இரண்டு இளைஞர்களையும் ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



நுவரெலியா மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்டு பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மூன்று இலட்சம் ரூபா செலவில் நிவாரண உதவிகளை நேற்று வழங்கிவைத்தது.




# தொடரும் சீரற்ற காலநிலை பல இடங்களில் மண்சரிவு

## போக்குவரத்து முற்றாக துண்டிப்பு

ஹற்றன் சுழற்சி, ஹற்றன் விசேட, தெல்தோட்டை, தலவாக்கலை, இரத்தினபுரி நிருபர்கள்

மலையகத்தின் பல பகுதிகளுக்கு தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டு ஒரு சில இடங்களில் போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளன.

மஸ்கெலியா – நல்லதண்ணி பிரதான வீதியில் ரிகாடன் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால் இந்த வீதியூடான போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளன.

பிரதேசவாசிகள் மற்றும் வீதி போக்குவரத்து சபை ஊழியர்கள் இணைந்து ஏற்பட்ட மண்சரிவை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

இதேவேளை, மஸ்கெலியா – நோட்டன்பிரிட்ஜ் பிரதான வீதியில் ஹப்புகஸ்தலாவ பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால் அந்த வீதியூடான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா பிளக்பூல் பகுதியில் நேற்று (03.08.2022) காலை ஏற்பட்ட மண்சரிவினால் இவ்வீதியூடான போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டிருந்தன.

எனினும், பிரதேசவாசிகள் மற்றும் அதிகாரிகள் இணைந்து மண்சரிவை அகற்றி தற்போது ஒரு வழி போக்குவரத்தாக மாற்றியுள்ளனர்.

இதேவேளை, ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை பகத்தொழுவ பகுதியிலும், தலவாக்கலை நாவலப்பிட்டி பிரதான வீதியில் பத்தனை மற்றும் கெலிவத்தை மற்றும் கடியலென்ன போன்ற பகுதிகளிலும், ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் சென்.கிளயார் மற்றும் பத்தனை ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவினால் அவ்விடத்தில் ஒரு வழி போக்குவரத்து மாத்திரமே இடம்பெற்று வருகின்றன.



நீரேந்தும் பிரதேசங்களுக்கு பெய்து வரும் தொடர்ச்சியான மழை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மிக விரைவாக உயர்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. பல இடங்களில் கடும் காற்று காரணமாக மரம் முறிந்து வீழ்ந்துள்ளமையால் அடிக்கடி மின்சார துண்டிப்பும் ஏற்பட்டு வருகின்றன. தொடர்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக கட்டட தொழிலாளர்கள் வேலைகளை மேற்கொள்ள முடியாது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அடைமழைகாரணமாக தேயிலை தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை பாரிய அளவில் குறைவடைந்துள்ளதுடன், தேயிலை உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளன.

தொடர்ச்சியாக மலையகத்தில் பல பகுதிகளுக்கு கடும் காற்றுடன் தொடர் மழை பெய்து வருவதனாலும், தொடர் மலை பகுதிகளில் காணப்படும் பல வீதிகளில் மண்சரிவு அபாயம் காணப்படுவதனாலும் வாகன சாரதிகள் அவதானமாக தமது வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## இரத்தினபுரியில் அதிகரிக்கும் 163 டெங்கு நோயாளர்கள்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

இரத்தினபுரி மாநகர சபை எல்லைக்குள் 163 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி ரோஹான் அமரசேகர தெரிவித்தார். இதனையடுத்து இரத்தினபுரி மாநகர சபை எல்லைக்குள் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் இப் பணிகளுக்கு பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமெனவும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களையும் அதனை உற்பத்தியாக இடமளித்த வியாபார நிலைய உரிமையாளர்களுக்கும் பல வீட்டின் உரிமையாளர்களுக்கும் 15 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சிவப்பு எச்சரிக்கை கடிதங்கள் 300 அளவில் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி ரோஹான் அமரசேகர மேலும் தெரிவித்தார்.

## சீரற்ற காலநிலையால் 330 குடும்பங்கள் பாதிப்பு

நுவரெலியா மாவட்டத்தில் தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக 330 குடும்பங்களை சேர்ந்த 1224 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(03) காலை பத்து மணியுடன் முடிவடைந்த காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட பாதிப்பு விபரங்களை நுவரெலியா மாவட்ட செயலக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில் பாதிக்கப்பட்டோர் விபரங்கள் வருமாறு: பாதிக்கப்பட்ட குடும்பங்கள் 330,பாதிக்கப்பட்ட நபர்கள் 1224 உறுதிசெய்யப்பட்ட மரணங்கள் 3,காணாமல் போனோர் 4,முழுதாக பாதிக்கப்பட்ட வீடுகள் 01 பகுதியளவில் பாதிக்கப்பட்ட வீடுகள் 168 என உறுதி செய்யப்பட்ட பாதிப்பு விபரங்களை அந்த நிலையம் தெரிவித்துள்ளது. ஆ.ரமேஸ்.

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 02/04/2022 | 03/05/2022 | 29/08/2022 & 01/09/2022 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

---

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 கீழான அறிவித்தல்

பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியினை பொலிஸ் திணைக்களத்திற்கு எடுத்துக் கொள்ளல்.

முதற்சுவட்டு வரைபட இல. Ka/PND/16/582 துண்டு இல. 'A' காணி பிரிவு 39(a)(1) இன் கீழ் இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. குறித்த விபரங்களுக்காக 2022ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் 21ம் திகதிய 2268/5ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமனியில் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : களுத்துறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : பாணந்துறை |
| கிராம் | : கெஸெல்வத்த |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 672 கெஸெல்வத்தை |
| அமைவிடம் | : ஹேனமுல்ல, கெஸெல்வத்தை |
| விஸ்தீரணம் | : 0.0860 ஹெக்டயார் |
| ஆரம்வ வரைபட இல. | : முதற்சுவட்டு வரைபட இல. Ka/PND/16/582 |
| துண்டு இல. | : A |

**ஜராங்கனி வீரசிங்ஹ**
**பிரதேச செயலாளார்,**
**பாணந்துறை.**

---

## விண்ணப்பம் தொடர்பான அறிவித்தல் கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

**வழக்கிலக்கம் 001642022/DTS**
**நடவடிக்கைமுளை சுருக்கம்**
**தன்மை மரணசாதனப்பத்திரம்**
**பெறுமதி: ரூ. 39,311,369.47**

தபால் பெட்டி இல. 1616, கெபொரோன் பொட்சுவான என்ற முகவரியைச் சேர்ந்த (இறந்த) லேட் பீடர் டேவிட் ஸ்டீவன்சன் என்பவரின் இறுதி விருப்பாவணம் மற்றும் மரணசாதனப்பத்திரம் தொடர்பில் பொட்சுவானா குடியரசில் மேல் நீதிமன்றத்தினால் மிசெல் பிரான்ஸ்-மெபிலெட்ஸா என்பவருக்கு 2021 ஜனவரி மாதம் 27ம் திகதி வழங்கப்பட்ட மரணசாதனப் பத்திரத்தினை மீள் இலச்சினை இடுவதற்காக குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் XXXVIIIB அத்தியாயத்தின் 554U பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற விண்ணப்பம் தொடர்பில்

மிசெல் பிரான்ஸ்-மெபிலெட்ஸா
மே/பா, பர்ஸ்ட் நேஷனல் பேங்க் பொட்சுவான
பிரைவேட் கிளையன்ட்ஸ் டிவிசன்
தபால் பெட்டி 1552, கெபொரோன்
பொட்சுவானா
பின்வரும் அற்றோணி தத்துவக்காரர் மூலம் தோன்றுகின்றார்

அடுல்யா தர்ஷனி டி சில்வா
விலா அடுல்யா முகுது மாவத்தை,
கப்புருகமுவ, மாத்தறை

**மனுதாரர்**

தபால் பெட்டி இல. 1616, கெபொரோன், பொட்சுவானா என்ற முகவரியைச் (இறந்த) லேட் பீடர் டேவிட் ஸ்டீபன்சன், பொட்சுவானா குடியரசில் மேல் நீதிமன்றத்தினால் மிசெல் பிரான்ஸ்-மெபிலெட்ஸா என்பவருக்கு 2021 ஜனவரி மாதம் 27ஆம் திகதி வழங்கப்பட்ட மரணசாதனப் பத்திரத்தினை மீள்-இலச்சினை இடுவதற்காக குடியியல் நடவடிக்கை சட்டக் கோவையின் XXXVIIIB அத்தியாயத்தின் 554ஆம் பிரிவின் கீழ் இந்த அறிவித்தலின் பிரசுரிப்புத் திகதியிலிருந்து 28 நாட்கள் முடிவடைந்த பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்று மேற்கொள்ளப்படும் என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

2022ஆம் ஆண்டு 07 மாதம் 29ஆம் திகதியாகிய இன்று

**எப். ஜே. என்ட். ஜீ. டி சேரம்,**
**மனுதாரர் சார்பிலான சட்டத்தரணிகள்**
**இல. 216, டி சேரம் பிளேஸ், கொழும்பு -10.**

---

**திருத்தம்:-** முதல் பந்தியில் மூன்றாம் வரிசையில் ''இறக்குமதி செய்யவோ'' என்ற சொற்பதம் நீக்கப்படுகின்றதுடன் இல. 6 இன் இறுதியில் ''இணையத்தளம்'' என்ற சொற்பதம் உட்புகுத்தப்படுகின்றது.

## அரசாங்க அறிவித்தல்கள்

**பணிப்புரை இல.: 85**

### 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம் (திருத்தியமைக்கப்பட்டது) 10 (1) (அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 10 (1) (அ) ஆம் பிரிவினால் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, அனைத்து இறக்குமதியாளர்கள், தயாரிப்பாளர்கள், உற்பத்தியாளர்கள், களஞ்சிய உரிமையாளர்கள், விநியோகத்தர்கள், பொதியிடுபவர்கள், இணையதளம் மூலம் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் (Online Traders), மற்றும் வியாபாரிகள் எவரும் நுகர்வோரினால் சில்லறை விலைக்கு கொள்வனவு செய்யப்படும் அனைத்து வியாபாரப் பொருட்களினதும் இறுதி உற்பத்தி திகதி (End Product) உள்ளடங்கும் பொதியுறை அல்லது கொள்கலன் மீது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை தெளிவாக விளங்கக்கூடிய இடத்தில் அச்சடித்திருந்தாலன்றி அல்லது அகற்ற முடியாத சுட்டுத் துண்டு மூலம் வெளிப்படுத்தினாலன்றி அத்தகைய பண்டங்களை தயாரிக்கவோ, உற்பத்தி செய்யவோ, களஞ்சியப்படுத்தவோ, விநியோகிக்கவோ, பொதியிடவோ, மீள்பொதியிடவோ, விற்பனை செய்யவோ, விற்பனைக்கு காட்சிப்படுத்தவோ, விற்பனைக்காக வெளிப்படுத்தவோ அல்லது விற்பனைக்காக வழங்கவோ முடியாதென பணிப்புரை விடுக்கின்றது.

1. ஆகக்கூடுதலான சில்லறை விலை.
2. நிறை அல்லது தொகை.
3. உற்பத்தி செய்த திகதி/ மீள்பொதியிட்டிருப்பின், பொதியிடப்பட்ட திகதி.
4. காலாவதி திகதி/ பாவனைக்கு உகந்த கடைசித் திகதி/ செயற்பாட்டுக் காலம் (காலாவதியாகாத பண்டங்களுக்கு அவசியமில்லை)
5. தொகுதி/ குறியீட்டு இலக்கம்.
6. உற்பத்தியாளரின் பெயர்/ பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்/ இணையதளம்.
7. இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் இறக்குமதி செய்யப்பட்ட நாடு, வழங்குநர் அல்லது இறக்குமதியாளர் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம்/ இணையதளம்.

இப்பணிப்புரை 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,**

**சாந்த நிரிஎல்ல,**
**தவிசாளர்**

**கொழும்பு.**
**2022 யூன் 29.**

---

# அறிவித்தல்

## உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262ஆம் அதிகாரம்)

2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின் திருத்திய உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 66(எ) உடன் இணைத்திணங்க வேண்டிய 66(இ) சரத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262ஆம் அதிகாரம்) இனால் திருத்திய 2012 இன் 22ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின் 66(எ) உடன் இணைத்திணங்க வேண்டிய 66(இ) சரத்தினது ஒழுங்கு விதிகளின்படி வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நூபே ஹேவகே ரோய் நிஷாந்த ஆகிய நான், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பிரகாரம் வடமத்திய மாகாண அநுராதபுர மாவட்டத்தின் ரம்பேவ பிரதேச சபையின் வெற்றிடமாகியுள்ள உபதலைவர் பதவிக்கு உபதலைவர் ஒருவரை தெரிவு செய்வதற்கான கூட்டம் 2022.08.22 மு. ப. 10.00 இற்கு ரம்பேவ பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**என். எச். ஆர். நிஷாந்த**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடமத்திய மாகாணம்.**

2022.08.02

**அநுராதபுரத்திலுள்ள**
**வட மத்திய மாகாண**
**உள்ளூராட்சித் திணைக்களத்தில்.**

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2022 ஆம் ஆண்டு யூன் மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி**
**தொழில் ஆணையாளர் அதிபதி**

**தொழில் திணைக்களம்**
**கொழும்பு - 05**
**2022 ஆம் ஆண்டு 08ஆம் மாதம் 01ஆந் திகதி.**

| | |
|---|---|
| கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில் | வேலையாள் ஒரு நாளுக்கு ரூபா 1446.46 |

இதற்கும் மேலதிகமாக, 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில் தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

---

# பெறுகை அறிவித்தல்

### ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்கு உலர்ந்த மருந்துகளை வழங்குவதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரல் - 2022

இத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் கேள்வி மாதிரிப்பத்திரத்தின் மூலம் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக கீழே குறிப்பிடப்படுமாறு 'மீளளிக்கப்படாத' கேள்விக் கட்டணத்தை இத்திணைக்களத்திற்கு காசாக செலுத்தி உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களுடன் பிரதேச செயலாளரினால் விநியோகிக்கப்படும் சொத்துச் சான்றிதழின் (பொது 170 மாதிரி) மூலப் பிரதியையும், கேள்விப் பிணைக் கட்டணத்தையும் செலுத்தி இருத்தல் கட்டாயமாகும்.

| வழங்கல் தன்மை | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி ரூ. | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. | 2021.12.31ம் திகதியின் பின் விநியோகிக்கப்படும் சொத்து சான்றிதழ் |
|---|---|---|---|
| ஊவா மாகாண ஆயுர்வேத மத்திய களஞ்சியத்திற்கு உலர் மருந்துகளை வழங்குதல் | காசாக செலுத்துவதாயின் 100,000.00<br>வங்கிப் பிணை மூலமாயின் 200,000.00 (இப்பிணை கேள்விப் பத்திரம் திறக்கப்படும் தினம் முதல் 120 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்) | 2000/- | 500,000/- |

கேள்வி மாதிரிப் பத்திரங்கள் 2022.08.04 முதல் 2022.08.24 பி.ப. 2.00 வரை அரச வேலை நாட்களில் இத்திணைக்கள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொறியிடப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டுவதுடன், மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வேறு வேறு உறைகளில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'உலர் மருந்துகளை வழங்குதல் - 2022, தியத்தலாவ ஆயுர்வேத திணைக்களம், என்று குறிப்பிட்டு 2022.08.25 பி.ப. 2.00 இற்கு முன் தலைவர், பெறுகைக் குழு, ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களம். தியத்தலாவ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பெறுகைக் குழுவின் தலைவரின் அறையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் திறக்கப்படுவதுடன், இவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளல், நிராகரித்தல் அல்லது ஒரு பகுதியை மாத்திரம் ஏற்றுக்கொள்ளல் பற்றிய முழுமையான உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது இது பற்றிய மேலதிக விபரங்களை தொ.பே.இல. 0572229173 என்ற இலக்கத்திற்கு திரு. பண்டாரவை அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களம்,**
**தியத்தலாவ.**

---

## அற்றோணி தத்துவ அதிகாரத்தை இரத்து செய்வதற்கான அறிவித்தல்

அமெரிக்கா ஐக்கிய இராச்சியம், CA 93711, பிரஸ்னோ, நோர்த் வேன் நெஸ் புலவார்ட், இல.5332 எனும் இடத்தில் குடியிருக்கும் டாக்டர் தினேஷி லயனகே (இலங்கை கடவுச்சீட்டு இல.M2207514) ஆகிய நான் அமெரிக்கா ஐக்கிய இராச்சியம், பிரஸ்னோ மாநிலத்தில், கலிபோர்னியா பிரசித்த நொத்தாரிஸ் எலிஸ் எஸ். மொஎக் இனால் உறுதி செய்யப்பட்ட 2011.10.31 ஆம் திகதி கொண்ட விஷேட அற்றோணி தத்துவ பத்திரம் மூலம் கோட்டை, மாதிவெல, சுபத்ரா மாவத்தை, இல.22/8 என்ற இடத்தில் குடியிருக்கும் டாக்டர். அனீஷ புத்திக மொல்லிகொட லியனகே (தே.அ.அ.இல. 731970025V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவ அதிகாரத்தை, எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக ரத்துச்செய்கிறேன் என இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**டாக்டர் தினேஷி லியனகே**

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

## அறிவித்தல்
## பீடி உற்பத்தித் தொழில்

தொழில் அமைச்சர் அவர்களினால் (136ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33(1)(அ)ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 2015 ஆண்டு மே மாதம் 27ஆம் திகதிய 1916/13ஆம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையொன்றின் வாயிலாக எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தினால் தொழில் ஆணையாளர் நாயகம், பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி ஆகிய நான் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 33(2)ஆம் பிரிவின் கீழ் பீடி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நாளாந்த வேலை தொடர்பாக இவ்வறிவித்தலுக்கான அட்டவணையில் கூறப்பட்டுள்ள துண்டு வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள அளவு விகிதங்களை நிருணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என அக் கட்டளைச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

மேற் கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2022 ஆம் ஆண்டு 08 மாதம் 19ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மிது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி**
**தலைவர்**
**பீடி உற்பத்தித் தொழிலுக்கான**
**சம்பளச் சபை**

**'மெஹெவரபியெச'**
**தொழில் திணைக்களம்,**
**கொழும்பு-05,**
**2022ஆம் ஆண்டு 07 மாதம் 27ஆந் திதகி**

**அட்டவணை**

பீடி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1957ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் திகதிய 11208ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2019ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 01ஆந் திகதிய 2138/3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிவுகள், அவ்வட்டவணையின் 11ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**11ஆம் பாகம்**
**துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள விகிதங்கள்**

(பீடி சுருட்டுவதற்குச் சுற்றிலைகளைத் தயாரித்தல், சுற்றும் இலைகளை வெட்டுதல், சுற்றிலைகளுள் 'பீடிப் புகையிலையை' நிரப்புதல், பீடி சுருட்டுதல், சுருட்டிய பீடிகளைக் கட்டுதல் ஆகியன உட்பட) பீடி சுருட்டுவதற்குத் துண்டு வேலைக்குரிய கீழெல்லைச் சம்பள விகிதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| | ரூ.ச |
|---|---|
| (அ) 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 500.00 |
| (ஆ) 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 562.00 |
| (இ) 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 612.00 |

(சுற்றிலைகளுக்குள் பீடிப் புகையிலையை நிரப்புதல், பீடி சுருட்டுதல், சுருட்டிய பீடிகளைக் கட்டுதல் ஆகியன உட்பட ஆனால் சுருட்டுவதற்குச் சுற்றிலைகளைத் தயாரித்தலும் சுற்றும் இலைகளை வெட்டுதலும் நீங்கலாக) பீடி சுருட்டுவதற்குத் துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள விகிதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| | ரூ.ச |
|---|---|
| (அ) 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 375.00 |
| (ஆ) 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திறகு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 425.00 |
| (இ) 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 468.00 |

(சுருட்டுவதற்கு சுற்றிலைகளைத் தயாரித்தல் உட்பட) சுற்றும் இலைகளை வெட்டுதற்குத் துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| | ரூ.ச |
|---|---|
| (அ) 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 250.00 |
| (ஆ) 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 275.00 |
| (இ) 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 287.00 |

சுருட்டிய பீடிகள் சுற்றி வட்ட நாமவிலாசம் ஒட்டுவதற்கு துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதம் 1000 பீடிகளுக்கு 62.50 ரூபாவாக இருத்தல் வேண்டும்.

---

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல:- AKU/LAN/06/LA/101**

கீழ்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை அரசுக்கு சுவீகரித்துக் கொள்ள உத்தேசிக்கின்றது. மேலதிக விபரங்களுக்கு இல. 2283/37 கொண்ட 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 09ஆந் திகதி கொண்ட இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**அட்டவணை 1**

| | |
|---|---|
| மாவட்டம் | : மாத்தறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : அக்குறஸ்ஸ |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : திகனஹேண |
| கிராமத்தின் பெயர் | : திகனஹேண |
| காணியின் யெர் | : அளுத்ஹேன |
| திட்ட வரைவு இல | : அ.க.பி. 535 மேலதிக எண் 26 |
| காணித் துண்டு இல | : 919, 920, 921, 922, 923, 924 |

**கே.ஜீ.டீ. அனோஜா**
**பிரதேச செயலாளர்**
**அக்குறஸ்ஸ**

**2022 யூலை மாதம் 22ஆந் திகதி**
**அக்குறஸ்ஸ பிரதேச செயலகத்திலேயே.**

---

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி
# விலைமனுக்களுக்கான அழைப்பு

### அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் தகவல் தொழில்நுட்ப கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் மெனுவல்களை மீள்நோக்கல் மற்றும் நாளதுவரைக்கு உட்படுத்துதல்

| | |
|---|---|
| **பெறுகையின் விபரம்** | தகல் தொழில்நுட்ப கொள்கைகள், நடைமுறைக்கு மற்றும் மெனுவல்களை மீளநோக்கல் மற்றும் நாளதுவரைக்கு உட்படுத்துவதற்கான ஆலோசனைகளைக் கோரல் |
| **செலுத்த வேண்டிய மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணம்** | ரூபா 1000/- |
| **விலைமனு ஆவணங்கள் வழங்குவதற்கான திகதிகள்** | 2022.08.04 முதல் 2022.08.16 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை |
| **கேள்வி மூடப்படும் திகதி மற்றும் நேரம்** | 18.08.2022 மு.ப. 10.00 |
| **சமர்ப்பிக்க வேண்டிய விலைமனுப் பிணையின் பெறுமதி** | ரூ. 20,000/- |

ஆலோசனை கோரல் ஆவணங்களை கொழும்பு- 03, காலி வீதி, இல. 269, அரச ஈட்டு முதலீட்டு வங்கி லொஜிஸ்டிக் பிரிவு (4ம் மாடி) பிரதம முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம். ஓர் எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பிப்பதன் பேரில் வேலை நாட்களில் 2022.08.04 முதல் 2022.08.16 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை படிவங்கள் விநியோகிக்கப்படும்.

2. **தகைமை தகவுத்திறன்**
கீழ்க்காணும் தகைமை தகவுத்திறன்களைக் கொண்டுள்ள ஓர் தொழில்சார் அல்லது தொழில்சார் குழுவாக விலைமனுதாரர் இருக்க முடியும்.
   - அ. நிதி மற்றும் வங்கித்துறையில் ஒழுங்குறுத்தல் தேவைப்படுத்தல், ஆட்சி, தகவல் தொழில்நுட்பவியல் கொள்கைகள் மற்றும் செயற்பாடு, நடைமுறைகள் பற்றி விலைமனுதாரர் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.
   - ஆ. குறைந்தபட்சம் 3 வருடங்களுக்கு சமமான நடவடிக்கைகளில் விலைமனுதாரர் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
   - இ. விலைமனுதாரர் குறைந்தபட்சம் 3 நிதி நிறுவனங்களுக்கு தகவல் தொழில்நுட்ப கொள்கை மீள்நோக்கல்களை நிறைவேற்றியிருத்தல் வேண்டும். அத்துடன் சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. 2022.08.18 முதல் 2022.12.14 வரையான ஓர் குறைந்தபட்ச காலத்திற்காக செல்லுபடியாகும் ஓர் வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் மற்றும் மேலே குறிப்பிடப்படுமாறு கேள்வியுடன் சம்பந்தப்பட்ட பெறுமதிக்கு அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் விலைமனுப் பிணையை சித்திகரமான ஆலோசனை கோரலுடன் இணைத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் 2022.08.18ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மூடப்பட்டபின்பு உடனடியாகத் திறக்கப்படும் மு.ப. 10.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.
5. மேலதிக விபரங்களை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி லொஜிஸ்டிக் பிரிவு, பிரதம முகாமையாளரிடமிருந்து தொடர்பு இலக்கம் 011 7722879 ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

**பிநிஅ/பொது முகாமையாளர்,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி, கொழும்பு -03.**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/PT/09/036 | Marine Paints | 30,000.00 | 1,000.00 | 22-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/09/037 | ZN Al Roofing Sheet and ZN Al Ridge Cap | 50,000.00 | 1,000.00 | 22-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/09/038 | GI Thread Bar and GI Nut, Bolt and Washer | 30,000.00 | 1,000.00 | 22-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/09/039 | GI Lipped Channel and GI Pipe HD | 100,000.00 | 3,500.00 | 22-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/09/040 | MS I Beam and MS Plates | 145,000.00 | 3,500.00 | 22-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/20/010 | 02 Nos. 40KVA Sound Proof Generator | 80,000.00 | 1,000.00 | 25-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/09/052 | 2100 Ltr SAE 15W -40 Multi Grade Engine Oil | 19,000.00 | 1,000.00 | 25-08-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஆகஸ்ட் 08ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/06/PT/6356(MP) | 04 Nos. Wire Ropes of Size Ø22.4MM X 408M | 55,000.00 | 1,000.00 | 01-09-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6358(MP) | Spares for UD Nissan Engines Fitted with UD Nissan Prime Movers | 25,000.00 | 1,000.00 | 01-09-2022 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/16/055 | 1000 Metre $16MM^2$ CU/PVC/PVC/Two Core Cable | 45,000.00 | 1,000.00 | 25-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/17/053 | 1500 Mtrs. of Cloth Drill for Year 2022 | 24,000.00 | 1,000.00 | 25-08-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஆகஸ்ட் 08ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

## பெறுகை அறிவித்தல்

# கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்

## தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்களின் கீழ் விலைமனுக்கோரல் (NCB)

2022/2023 ஆண்டிற்காக, கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் சேவையை வழங்குவதற்காகத் தகைமையுள்ள நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.

| பெறுகை இலக்கம் | விபரம் | விலைமனுப் பிணையம் ரூபா | செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|
| GWUIM/GA/PROC/2022/05/CLN | சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கல் | 100,000.00 | 2022.12.08 வரை அல்லது அதற்கு மேல் |

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்குப் பின்வரும் தகைமைகளைப் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

1. வியாபாரப் பதிவுச் சான்றிதழொன்று பெற்றிருத்தல் வேண்டும்.
2. கடந்த 05 ஆண்டுகளில் 08 மில்லியன் ரூபாவிற்குக் குறையாத வருடாந்தப் பெறுமானங்களுடன் சுத்திகரிப்புச் சேவை ஒப்பந்தங்கள் 03 ஆவது குறைந்தபட்சம் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.
3. அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படாத (Blacklist) நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களுடனும் மேற்படி பெறுமானத்திற்கான செல்லுபடிக் காலத்துடன் கூடிய மீளளிக்கப்படும் விலைமனுப்பிணையமொன்று, இலங்கையில் பதிவு செய்யப் பெற்றுள்ள வணிக வங்கியொன்றிலிருந்து, 'உபவேந்தர், கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்' என்ற பெயருக்குப் பெற்று அல்லது பல்கலைக்கழக சிறாப்பருக்குக் காசாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை, பிரதிப் பதிவாளர் - பொது நிருவாகம் (033-2223784 அல்லது 033-2222748/ 740, சேவை நீடிப்பு இலக்கம் 136) மூலம் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், விலைமனுப்படிவங்ளை இப்பல்கலைக்கழகப் பொது நிருவாகப் பிரிவில் இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

இதற்கான களப்பரிசீலனை 2022.08.15 முதல் 2022.08.19 வரை வார வேலை நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 02.00 வரை மேற்கொள்ளலாம். இதற்கான விலைமனு முன்னோடிக் கூட்டம் (Pre Bid Meeting) 2022.08.16 அன்று மு.ப. 10.00 இற்கு பல்கலைக்கழக நிருவாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள குழுக்கூட்ட மண்டபத்தில் நடைபெறுவதுடன், அவ்வேளையில் அனைத்து விலைமனுதாரர்களினதும் வரவு எதிர்பார்க்கப்படுகின்றது.

அனைத்து விலைமனுக்களையும் சிங்கள மொழியில் மாத்திரம் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தம் நிறுவனக் கடிதத் தலைப்பில் எழுத்துருவ விண்ணப்பக்கடிதமொன்று, மீளளிக்கப்படாத ரூபா 5,000.00 இற்கான தொகையொன்றை பல்கலைக்கழக சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுடன் 2022.08.10 முதல் 2022.08.24 வரை வார வேலை நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 02.00 வரை பிரதிப் பதிவாளர் பொது நிருவாகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல்பிரதியென தனித்தனியாகக் குறிப்பிடப்பட்ட தபாலுறைகளில் உள்ளிட்டு முத்திரையிட்டு மீண்டும் அவ்விரு தபாலுறைகளையும் ஒரு தபாலுறையில் உள்ளிட்டு முத்திரையிட்டு, அதன் இடது பக்க மேல் மூலையில், 'கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்திற்குச் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கல் - 2022/2023' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு 2022.08.25 அன்று பி.ப. 02.00 இற்கு முன்னர் நிருவாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள பதிவாளரின் அலுவலகத்திற்கு அண்மையில் வைக்கப்பட்டுள்ள 'சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கல் - 2022/2023' இற்கான கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும் என்பதுடன் அவ் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய அதிகாரம் பெற்ற அலுவலரொருவர் சமுகமளித்திருக்கலாம்.

திணைக்களப் பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும். இதற்கான மேலதிக தகவல்கள் விலைமனுப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு,**
**கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம்**
**கண்டி, வீதி, யக்கல.**
**2022.08.04**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/ME/ML/23/2022 | ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை / கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை சந்திக்கு போக்குவரத்து சமிஞ்ஞை விளக்கை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பராமரித்தல் | 5,600.00 | மொத்த விலைக்கோரல் தொகையின் 2% நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணைமுறி | சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் கடந்த 5 வருடங்களில் இதனையொத்த வேலைகளில் 9 மாத செயற்றிட்ட அனுபவம் இருத்தல் வேண்டும். | பொறியியல் பணிப்பாளர் (TDRS) தொலைபேசி: 011-2694593 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 -** கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து **(www.colombo.mc.gov.lk)** தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04,** இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு-06.
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,** மாளிகாகந்த, கொழும்பு-10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணையதளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 -** நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை 2022-08-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022-08-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது/ இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.03.23ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.02.21ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். ரொக்கப் பணமாகச் செலுத்தப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-08-25ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2022-08-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

ஊ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட கேள்விகள்/ விலைமனுக்களுக்கு கேள்விதாரர்/ விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

## பெயர் மாற்றம்

சமாந்துறை கருவாட்டுக்கல் 01, 148ஆம் 10ம் வீதி முகவரியை வதிவிடமாகக் கொண்ட **அலியார் முகம்மது சன்** 493654365V தேசிய அடையாள அட்டையையும் கொண்ட நான் எனது பெயரை சுயவிருப்பத்தின்படி **அலியார் முஹம்மது ஹுசைன்** என்று மாற்றிக் கொண்டுள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேன்

**அலியார் முஹம்மது ஹுசைன்**

www.adz.lk
it's what you want

# மாவனல்லை பிரதேச சபை

## சூரிய பெனலை நிறுவுதல்

### கேள்வி கோரல் அறிவித்தல்

மாவனல்லை பிரதேச சபையினால் பின்வரும் கருமங்களிற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கருமம் | விண்ணப் பப்படிவக் கட்டணம் ரூபா | மீளளிக்கப் படாத பிணைத் தொகை ரூபா | மீளளிக்கப் படும் விலைமனுப் பிணையம் ரூபா | விலைமனு செல்லு படியாகும் காலம் | விலைமனுப் பிணையம் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|
| 18KW கொள்ளளவு உடைய கூரையின் மேல் நிறுவப்படும் சூரியப் பெனல் தொகுதி ஒன்றை நிறுவுதல் | 1000.00 | 3000.00 | 50000.00 | 2022.12.28 | 2023.01.25 |
| சூரிய வலுவினால் இயங்கும் 20 வீதி விளக்குகளை நிறுவுதல் | 1000.00 | 3000.00 | 50000.00 | 2022.12.28 | 2023.01.25 |

❖ மேற்படி கருமங்களிற்காக ஆர்வமும் தகைமையும் பெற்றுள்ள நிறுவனங்கள் இதற்காக விண்ணப்பிக்கலாமென்பதுடன், 2022.08.08 முதல் 2022.08.29 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரையான காலப் பிரிவில் விண்ணப்பப்படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படாத பிணைத் தொகையைச் செலுத்தி இதற்கான விண்ணப்பப்படிவங்களை மாவனல்லைப் பிரதேச சபையின் வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

❖ 2022.08.31 அன்று மு.ப. 10.00 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு, அன்றைய தினம் மு.ப. 10.30 இற்கு மாவனல்லை பிரதேச சபையின் அலுவலகத்தில் அவை திறக்கப்படும்.

❖ மேற்படி கேள்வி தொடர்பான விபரங்களைப் பின்வரும் தொலைபேசி எண்ணினூடாக அறிந்து கொள்ளலாம்: 035-2246275

❖ விலைமனு தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

**ஆர்.பீ.என்.டீ. ஸ்டீவன்.**
**தலைவர்,**
**பிரதேச சபை**
**மாவனல்லை**
**2022.08.04**

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் - மேல் மாகாணம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### மேல் மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு 30 கேவீஏ மின்பிறப்பாக்கியொன்றை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல், பரீட்சித்தல், பராமரித்தல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்கான பெறுகை

1. பின்வரும் உருப்படிக்காக கொழும்பு-10, மாளிகாவத்த செயலக கட்டிடத்திலுள்ள மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வதுடன் விலைமனுக்கள் 2022.08.25 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு மூடப்படும்.

| விலைமனு குறிப்பீட்டு இல. | விலைமனுவின் பெயர் | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் (ரூபாவில்) | விலைமனு முன்கூட்ட திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| WP/PD/PRO/1/11/2022 | மேல் மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு 30 கேவிஏ மின்பிறப்பாக்கியொன்றை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல், பரீட்சித்தல், பராமரித்தல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்கான பெறுகை. | 2000.00 | 2022.08.18 ஆம் திகதியன்று (மு.ப. 10 மணியிலிருந்து 10.30 மணி வரையும்) |

2. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் வழமையான வேலை நாட்களில் 2022.08.05 ஆம் திகதியிலிருந்து 2022.08.24 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெட்டி 876, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெட்டி 876, மேல் மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் 2022.08.25 ஆம் திகதியன்று தீர்மானிக்கப்பட்ட மூடும் நேரத்தின் பின்னர், உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும்.
4. விலைமனுக்கோரல் ஆவணங்கள் உபகரணத்தின் உற்பத்தியாளர்களின் ஏகநியமிக்கப்பட்ட பிரதிநிதி/தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணங்களை கோரும் நேரத்தில் மேற்குறிப்பிட்டுள்ள தேவைப்படுத்தலுக்கு சான்று பகரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களுக்கு, மேல் மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.
   தொடர்பிலக்கம்: 011-2437154/011-2434852
6. மேலதிக தகவலுக்கு **http://www.healthdept.wp.gov.lk** என்ற எமது இணையதளத்தை பார்வையிடவும்.
7. இப்பெறுகையின் முழுமையான பெறுகைச் செயற்பாட்டை அல்லது பெறுகைச் செயற்பாட்டின் பாகமொன்றை இரத்துச் செய்வதற்கான அதிகாரத்தை பெறுகை அமைப்பானது கொண்டுள்ளது.

**மருத்துவ கலாநிதி தம்மிக்க ஜயலத்,**
**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (மேல் மாகாணம்),**
**மாளிகாவத்த,**
**கொழும்பு-10.**

# பெறுகை அறிவித்தல் (திருத்தம்)

## வடமத்திய மாகாண சபை

## மாகாண ஆயுர்வேதத் திணைக்களம்

### கூட்டிப் பெருக்குவதற்காக தொழிலாளர்களை வழங்கல் – 2022/2023 வருடம்

2022.07.22 அன்று தினமின, தினகரன் மற்றும் டெயிலிநியூஸ் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமான, மேற்படி அறிவித்தலின் 02ஆம் நிரல் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | நிறுவனம் | தேவையான சேவை | கட்டணங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மத்திய வங்கி அனுமதித்த வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் 91 நாட்கள் (2022.11.10 வரை) செல்லுபடியாகும் நிபந்தனைகளற்ற விலைமனுப் பிணைத் தொகை ரூபா | பொது 170 இன் பிரகாரம் ஆதனச் சான்றிதழ் ரூபா | மீளளிக்கப் படாத விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா |
| 02 | மின்னேரிய ஆதார ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் பஞ்சகர்ம மத்திய நிலையம் | கூட்டிப் பெருக்கும் சேவைக்காக தொழிலாளர் களை வழங்கல் | 48,000.00 | 150,000.00 | 1,000.00 |

02. ஏனைய நிபந்தனைகள் அவ்வாறே மாற்றமின்றி அமையும்.

**தலைவர்,**
**மாகாண ஆயுர்வேதத் திணைக்களப் பெறுகைக் குழு,**
**மாகாண ஆயுர்வேதத் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம், அநுராதபுரம்.**
**2022.08.02**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரவு

## நீர்ப்பாசன அமைச்சு

# நீர்ப்பாசனத் திணைக்களம்

## ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)

**செயற்றிட்ட இலக்கம்: P166865.** கடன் இல. **66210**

## தேசிய போட்டி ரீதியிலான விலைகோரல்

1. இலங்கை சனநாயக, சோஷலிசக் குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (International Development Association) (உலக வங்கி) ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்கான நிதி வசதிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதன் ஒரு பகுதியை கீழேயுள்ள அட்டவணையில் விபரப்படுத்தியுள்ளவாறான ஒப்பந்தத்திற்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.
2. திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர் நீர்ப்பாசன திணைக்களத்தின் பெறுகைக் குழு சார்பில் பின்வரும் வேலையின் பொருட்டு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன.
3. இந்த ஒப்பந்தத்தின் கீழ் சேனாநாயக்க சமுத்திர அணைக்கட்டிற்கு அலைதடுப்பு கற்களை (Rip-Rap) வழங்குதல் மற்றும் அணைக்கட்டு வீதியை மேம்படுத்துதல் என்பன அடங்குகின்றன.

**அட்டவணை இல. 01**

| இல. | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | CIDA பதிவுத் தரம் | மதிப்பீட்டுக் கிரயம் (வரிகள் இன்றி) (இல. ரூபா மில்.) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | மீளளிக்கப் படாத கட்டணம் (இலங்கை ரூபாயில்) | கேள்விப் பிணை முறி (இலங்கை ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | LK-MOMDE-302734- CW-RFB | சேனாநாயக்க சமுத்திர அணைக்கட்டிற்கு அலைதடுப்பு கற்களை (Rip-Rap) வழங்குதல் மற்றும் அணைக்கட்டு வீதியை மேம்படுத்துதல் | C2 அல்லது அதற்கு மேல் | 533.23 | 730 | 65,000.00 | 9,000,000.00 |

4. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் கேள்வித் தரவிலுள்ள பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான கேள்விதாரர் மேற்படி 01ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பில் (Irrigation & Drainage Canals) விசேடத்துவ தரத்தில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) செல்லுபடியாகும் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. சித்திகரமான கேள்விதாரர் கடந்த ஐந்து வருட காலத்தினுள் குறைந்தபட்சம் 400 மில்லியன் இல. ரூபாவுக்கான சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஏனைய ஒப்பந்தங்களுக்காக பெற்றுக்கொண்ட முற்பணங்கள் மற்றும் கொடுப்பனவுகள் தவிர இந்த ஒப்பந்தத்திற்காக குறைந்தபட்சம் 74.7 மில்லியன் இல. ரூபாவுக்கான திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், 2ஆம் மாடி, ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள் கிளை, நீர்ப்பாசன பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதே முகவரியில் 2022-08-08ஆம் திகதி முதல் 2022-09-05ஆம் திகதி வரையில் (வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் முன்னறிவித்தல் செய்து கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். (தொடர்பிலக்கம்: 011-2582897/011-2583305).
7. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள (தொகைக்கு 01ஆம் அட்டவணையைப் பார்க்கவும்) மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின், பின்வரும் வங்கிக் கணக்கிலக்கத்திற்குச் செலுத்திய வரவுப் பற்றுச்சீட்டுடன் கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், நீர்ப்பாசன பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அவர்களுக்கு நிறுவனக் கடிதத் தலைப்பில் (மூலப் பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் மின்னஞ்சல் ஊடாக (dictptirrigation2015@gmail.com / தொலைநகல்: 011-2583305) சமர்ப்பிப்பதன் பேரில் 2022-08-08ஆம் திகதி முதல் 2022-09-05ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்வி கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

**அட்டவணை இல. 02**

| வங்கி விபரங்கள் | வங்கி வரவுத் துண்டு மற்றும் வேண்டுகோள் கடிதம் அனுப்புதல் | |
|---|---|---|
| | மின்னஞ்சல் முகவரி | தொலைநகல் இல. |
| வங்கியின் பெயர்<br>இலங்கை வங்கி தப்ரபேன் கிளை<br>கணக்கிலக்கம் மற்றும் பெயர்<br>7042385, நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்<br>(**Online** பரிமாற்றங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) | dictptirrigation2015@gmail.com | 011-2583305 |

8. பின்வரும் 03ஆம் அட்டவணையில் குறிப்பிட்டவாறு விலைமனுக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். வளமுள்ள கேள்விதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்குமாறு வேண்டப்படுகின்றனர்.


**அட்டவணை இல. 03**

| வேலையின் பெயர் | வேலைத் தள விஜயத்திற்கு உதவும் பிரதேச பொறியியலாளர் | வேலைத் தள விஜயத்திற்கான திகதி மற்றும் நேரம் | கேள்வி முன்னோடிக் கூட்டம் நடைபெறும் இடம், திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| சேனாநாயக்க சமுத்திர அணைக்கட்டிற்கு அலைதடுப்பு கற்களை (Rip-Rap) வழங்குதல் மற்றும் அணைக்கட்டு வீதியை மேம்படுத்துதல் | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் (அம்பாறை) தொலைபேசி: 063-2222055 | 2022-08-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் (அம்பாறை) | 2022-08-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களம், தலைமை அலுவலகம் (4ஆம் மாடி), கேட்போர் கூடத்தில் இடம்பெறும். |

9. சமர்ப்பிக்கப்படும் கேள்வி 2022-01-28ஆம் திகதி வரையில் (கேள்விகள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 175 நாட்கள் வரையில்) செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் அத்துடன் 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு 2023-02-25ஆம் திகதி வரையில் (கேள்விகள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 203 நாட்கள் வரையில்) செல்லுபடியாகும் கேள்விப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவது விலைமனு செல்லுபடியாகும் விலைமனுப் பிணை முறி இல்லாமல் இருந்தால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பதிலளிக்காதவை எனக் கருதப்பட்டு நிராகரிக்கப்படும்.
10. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரர் சிற்றொப்பமிட்டு அவரது முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் படிவங்களை 2022-09-06ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், கொழும்பு-10, இல. 500, டி.பி. ஜாயா மாவத்தை, நீர்ப்பாசன அமைச்சு, 8ஆம் மாடியில் அமைந்துள்ள மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம் மற்றும் பெறுகைகள்) அறையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், தலைவர், அமைச்சு பெறுகைக்குழு என முகவரியிட்டு மேற்படி முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். கேள்விகள் 2022-09-06ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
12. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியவற்றை தயவு செய்து எழுதவும்.
13. சுய விருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசன அமைச்சு,**
**இல. 500, டி.பீ. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10.**

**2022-08-04ஆம் திகதி.**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT


LAKE HOUSE

குத்துச்சண்டை:

# ருக்மால், சஞ்சீவனி குரே காலிறுதிக்கு முன்னேற்றம்



இங்கிலாந்தின் பெர்மிங்ஹாமில் நடைபெற்று வரும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் இலங்கை குத்துச்சண்டையில் எதிர்பார்ப்பை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

ஆண்களுக்கான 51–54 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட ருக்மால் பிரசன்ன மற்றும் பெண்களுக்கான 54–57 எடைப்பிரிவில் போட்டியிட்ட சஞ்சீவனி குரே ஆகியோர் காலிறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றுள்ளனர்.

இறுதி 16 வீரர்களுக்கான போட்டியில் கென்யா வீரர் ஷபி பகாரி ஹசனை 3–2 என வீழ்த்தி ருக்மால் பிரசன்ன தன்னுடைய காலிறுதி வாய்ப்பை தக்கவைத்ததுடன், சஞ்சீவனி பாகிஸ்தான் வீராங்கனை மெஹரீனை 5–0 என வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

ருக்மால் பிரசன்ன இன்று (04) நடைபெறவுள்ள காலிறுதிப்போட்டியில் கானா வீரர் ஆப்ரஹாம் மெனஸை எதிர்கொள்ளவுள்ளதுடன், சஞ்சீவனி குரே தன்னுடைய காலிறுதிப்போட்டியில் தென்னாபிரிக்காவின் பிவகுலே ஸ்பசிஸிவேயை எதிர்கொள்ளவுள்ளார்.

இதேவேளை ஆண்களுக்கான 67–71 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த விட்டாலிஸ் நிக்கல்ஸ் 0–5 என சமோவா வீரர் மரியன் பாஸ்டினோவிடம் தோல்வியடைந்து தன்னுடைய காலிறுதி வாய்ப்பை தவற விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரையிறுதியை இழந்தது இலங்கை மகளிர் அணி



பெர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் பெண்களுக்கான டி20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை மகளிர் அணி நியூசிலாந்திடம் 45 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது.

ஏற்கனவே இங்கிலாந்திடம் தோல்வியை சந்தித்த இலங்கை அணி அரையிறுதி வாய்ப்பை இழந்திருப்பதோடு பதக்கம் வெல்லும் எதிர்பார்ப்பும் சிதைந்துள்ளது.

பி குழுவுக்காக கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து மகளிர் அணி 20 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களையே பெற்றது. இதன்போது இலங்கை சார்பில் இனோகா ரணவீர 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

தொடர்ந்து பதிலெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 102 ஓட்டங்களையே பெற்றது. நிலக்ஷி டி சில்வா மாத்திரம் 35 பந்துகளில் 3 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 36 ஓட்டங்களை பெற்றார்.

இந்த போட்டியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து மகளிர் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இறுதிக் குழு நிலைப் போட்டியில் இலங்கை மகளிர் அணி இன்று வியாழக்கிழமை மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிய கிண்ண போட்டி அட்டவணை வெளியீடு



ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள ஆசியக் கிண்ணத் தொடருக்கான போட்டி அட்டவணை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இம்மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முதல் போட்டியில் போட்டித்தொடரை நடத்தும் இலங்கை அணியானது, ஆப்கானிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள இந்த போட்டி அட்டவணையின்படி இரண்டு குழுக்களாக அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் ஏ குழுவில் இலங்கை, பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் இடம்பிடித்துள்ளதுடன், பி குழுவில் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் தகுதிச்சுற்றில் வெற்றிபெறும் அணி இடத்தை பிடித்துக்கொள்ளும்.

ஆசியக் கிண்ணத் தகுதிச்சுற்றில் ஐக்கிய அரபு இராச்சியம், குவைட், சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இதில் வெற்றிபெறும் அணி பி குழுவில் இடத்தை பிடித்துக்கொள்ளும்.

குழுநிலை போட்டிகளில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் சுபர் 4 சுற்றுக்கு தகுதிபெறும். சுபர் 4 சுற்றில் ஒவ்வொரு அணிகளும் எதிரணிகளுடன் தலா ஒவ்வொரு முறை மோதும். சுபர் 4 சுற்றில் முதலிரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் செப்டம்பர் 11ஆம் திகதி டுபாயில் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் மோதும்.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று முதல் போட்டியில் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் மோதவுள்ளதுடன், பி குழுவுக்கான முதல் போட்டியில் எதிர்பார்ப்புமிக்க இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் ஒகஸ்ட் 28ஆம் திகதி பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
44th
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

## 44th OBSERVER SLT- MOBITEL

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் **OBSERVER SLT- MOBITEL** மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ....................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ....................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ....................
வாக்களித்தவர் பெயர் : ....................
முகவரி : ....................
மொபைல் இல. : ....................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 06-08-2022 இல. 19




# 17 ஆண்டுகளுக்குப் பின் இங்கிலாந்து அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம்



இங்கிலாந்து கிரிக்கெட் அணி 17 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து 7 டி20 மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

செப்டம்பர் இறுதியில் பாகிஸ்தான் செல்லும் இங்கிலாந்து அணி 7 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் மோதுகிறது. கராச்சியில் முதல் 4 போட்டிகளும், லாகூரில் கடைசி 3 போட்டிகளும் நடைபெற உள்ளன.

இந்தத் தொடர் முடிந்ததும் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ஐ.சி.சி உலகக் கிண்ண டி20 தொடரில் பங்கேற்கும் இங்கிலாந்து அணி, டிசம்பரில் மீண்டும் பாகிஸ்தான் சென்று டெஸ்ட் தொடரில் விளையாடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அணி 17 ஆண்டுகளுக்குப் பின்னர் பாகிஸ்தான் சென்று விளையாடுகிறது. நியூசிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளும் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# அமெ. சபாநாயகர் பெலோசியின் தாய்வான் விஜயத்தால் பரபரப்பு

### சீனா இராணுவ ஒத்திகை: வர்த்தகக் கட்டுப்பாடு



சீனாவின் கடும் கண்டனத்திற்கு உள்ளாகி உள்ள அமெரிக்க பிரதிநிதிகள் சபை சபாநாயகர் நான்சி பெலோசியின் தாய்வான் விஜயத்தில் அவர் தாய்வான் ஜனாதிபதி ட்சாய் இங் வென்னை நேற்று புதன்கிழமை சந்தித்தார்.

தாய்வானுக்கு கடந்த 25 ஆண்டுகளில் விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் மிக மூத்த அரசியல்வாதியாக பெலோசி பதிவாகியுள்ளார். இந்த தீவை அமெரிக்கா கைவிடாது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவுபடுத்துவதற்காகவே தமது தூதுக்குழு இங்கு வந்ததாக அவர் வலியுறுத்தியுள்ளார்.

பெலோசியின் இந்த விஜயத்திற்கு அமெரிக்கா விலை கொடுக்க வேண்டி ஏற்படும் என்று சீனா முன்னதாகக் குறிப்பிட்டிருந்தது.

தாய்வான் சுயமாக ஆளப்படுகின்றபோதும், அதனை தனது பிரிந்து சென்ற மாகாணமாக சீனா கருதுகிறது. அது மீண்டும் தனது நாட்டுடன் ஒன்றிணைக்கப்படும் என்று சீனா குறிப்பிடுகிறது.

“தாய்வானுடன் எப்போதும் நிற்பதாக நாற்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கா வாக்குறுதி ஒன்றை அளித்தது. இன்று எமது தூதுக்குழு தாய்வானுக்கு வந்து தாய்வான் மீதான எமது பொறுப்பை கைவிடமாட்டோம் என்று சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக குறிப்பிட்டிருக்கிறோம்” என்று பெலோசி தெரிவித்தார். இதில் அவர் அமெரிக்காவின் தாய்வான் உறவுகள் சட்டத்தை குறிப்பிட்டே அவர் இதனைத் தெரிவித்தார்.

சீனா மற்றும் அமெரிக்கா இடையிலான பதற்றம் அண்மைய ஆண்டுகளில் அதிகரித்திருப்பதோடு தாய்வான் விவகாரமும் இதன் முக்கிய புள்ளியாகக் காணப்படுகிறது.

பெலோசியின் வருகை இடம்பெற்று ஒரு மணி நேரத்திற்குள், தாய்வானை சூழவுள்ள கடல்பகுதியில் இந்த வாரத்தில் இராணுவ ஒத்திகை பற்றிய அறிவிப்பை சீனா வெளியிட்டது.

அதேபோன்று தாய்வானுடனான வர்த்தகங்களிலும் சீனா கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்துள்ளது. நிர்மாணத்துக்கு பயன்படுத்தப்படும் முக்கிய பொருள் ஒன்றான மணல் ஏற்றுமதி மற்றும் தாய்வானின் இறக்குமதிகளான சிட்ரஸ் பழம் மற்றும் சில வகை மீன்கள் நிறுத்தப்படும் என்று சீன வர்த்தக மற்றும் சுங்க அதிகாரசபை அறிவித்துள்ளது.

# பாக். வரி விதிப்பால் கடும் பாதிப்பு போராட்டத்தில் ஆதன நிறுவனங்கள்



பாகிஸ்தான் ஆதன விற்பனைத் துறைக்காக அரசு அளித்துள்ள நிதியை நிராகரித்துள்ள ஆதன நிறுவனங்கள், இத்துறையின் மீது அரசு விதித்துள்ள கடுமையான வரிச்சுமையை குறைக்குமாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

இவ்வருடத்துக்கான ஆதனங்களின் மீதான வரிகளை அரசு இரட்டிப்பாக்கியுள்ளது. இவ்வரிவிதிப்பான ஆதன நிறுவனங்களை நடத்திச் செல்ல முடியாத நிலையை தோற்றுவித்துள்ளது. இதனால் இத்துறை சார்ந்த பலர் தொழில் இழக்க நேரிடும். பாக். மத்திய அரசு கொஞ்சமும் கருணையற்ற வரிகளை அறவிட்டு வருகிறது என்று ஆதன வர்த்தக சம்மேளனம் தெரிவித்திருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தானின் ஆதன விற்பனை வர்த்தகத்துறை முக்கியமான ஒரு துறை என்றும் பெருமளவிலான வெளிநாட்டு நிதியை கொண்டுவரக் கூடியது என்றும் சுட்டிக்காட்டியுள்ள இச் சம்மேளனம், கடுமையான வரிவிதிப்பானது இவ்வர்த்தகத்தை நிலை குலையச் செய்திருப்பதாக கூறியுள்ளது.

பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து வருகிறது. அதன் தற்போதைய நிதிப் பற்றாக்குறை 17.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்படுகிறது. உலக அளவில் பொருட்கள் மற்றும் எரிபொருட்களின் விலைகள் அதிகரித்து காணப்படுவதால் பாகிஸ்தானின் இறக்குமதிக்கான செலவு மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேசமயம் இருதரப்பு மற்றும் பன்னாட்டு உடன்படிக்கைகள் வாயிலாக வெளிநாட்டு பண வரவு குறைந்துள்ள நிலையில் நிதி நெருக்கடி கடந்த சில மாதங்களாக மோசமடைந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# பாக். அமைச்சர் ரஷ்ய அமைச்சரை சந்திக்காதது ஏன்?

ரஷ்யாவின் தாஷ்கண்ட் நகரில் கடந்த 29ம் திகதி நடைபெற்ற 'ஷங்காய் கோர்பரேஷன் ஓர்கனைசேஷன்' என்ற பன்னாட்டு அபிவிருத்தி மாநாட்டில் கலந்து கொண்ட பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர், ரஷ்ய வெளிவிவகார அமைச்சரை சந்திக்காதது ஏன் என்று எதிர்க்கட்சியான பாகிஸ்தான் தரீக் ஈ இன்சாப் கேள்வி எழுப்பியுள்ளது.

இம் மாநாட்டில் கலந்து கொள்ள வருகை தந்திருந்த சீனா, கஸகஸ்தான், கைரிஜிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெஸ்கிஸ்தான் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை சந்தித்து விரிவாக பேச்சுவார்த்தை நடத்தியிருந்த பாக். வெளிவிவகார அமைச்சர் பிலாவல் பூட்டோ சர்தாரி, இந்திய மற்றும் ரஷ்ய அமைச்சர்களை சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டதாக 'த நியூ இன்டர்நெஷனல்' ஊடகம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒகஸ்ட் மாதம் 4ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.